விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 09 புதன்கிழமை (25.11.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 341

# பிரதான எதிர்க்கட்சிகளின் சார்பில் ஜெனரல் பொன்சேகா வேட்பாளர்

## ஜே.வி.பி. உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

(கொழும்பு)

பிரதான எதிர்க்கட்சிகளின் சார்பில் பொதுவேட்பாளராக முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா நிறுத்தப்படுவார் என ஜே.வி.பி. அறிவித்துள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கிய உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாத நிலையில் தாம் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்குவதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## உயர்ஸ்தானிகர்கள் ஐவர் இன்று யாழ்ப்பாணம் வருகை

(யாழ்ப்பாணம்)

இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் காந் உட்பட 5 இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதுவர்கள் இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தருவதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தகவல் தருகையில்,

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் காந், இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து மற்றும் தென்கொரிய தூதுவர்கள் இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகின்றனர்.

யாழ்ப்பாணத்திற்கு இன்று காலை 10.30 மணிக்கு வருகை தரும் 5தூதுவர்களும் நல்லூர் (16ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. தேசிய கல்வியியற் கல்லூரியில் யாழ்ப்பாண மாணவர்கள் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்வி பயிலும் யாழ். மாவட்ட மாணவர்கள்மீது நேற்றிரவு 9.45 மணியில் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில் நான்கு மாணவர்கள் படுகாயமடைந்துள்ளனர். யாழ்ப்பாண மாணவர்கள் தங்கியிருந்த விடுதிக்குள் நுழைந்த மற்றொரு மாணவர் குழு இவர்களைத் தாக்கியதுடன் உடனடியாக மட்டக்களப்பைவிட்டு வெளியேற வேண்டுமெனக் கூறியதாக யாழ். மாணவர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனால் அச்சம் கொண்ட மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரியில் கல்வி பயிலும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 25 மாணவர்களும் உடனடியாக (16ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி அரசாங்க ஊழியர்களுக்கு யாழிலிருந்து இலவச பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கு இன்று முதல் காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து இலவச பஸ் சேவை நடைபெறுமென யாழ். அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது, கிளிநொச்சி, முல்லைதீவு மாவட்டங்களில் பணிபுரியும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அரச ஊழியர்களின் நலன்கருதி இன்று முதல் யாழ்ப்பாணத்திலிருந்து காலை 6.30 மணிக்கு இலவச பஸ் சேவை ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

எனவே (16ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

மேல் மாகாண கல்வித்திணைக்களம் நடத்திய க.பொ.த சாதாரண தர முன்னோடிப் பரீட்சை வினாத்தாள்

'வரலாறு' பகுதி I

### நாளை

வரலாறு பகுதி II
கணிதம் பகுதி II
வெளிவருகிறது.

## தனக்கான பாதுகாப்பை வழங்கக்கோரி சரத் பொன்சேகா உயர் நீதிமன்றில் மனு



(கொழும்பு)

தனக்கு 600 இராணுவ வீரர்களும் 10 வாகனங்களும் 2 குண்டு துளைக்காத வாக னங்களையும் வழங்குமாறு அரசாங்கத் துக்கு கட்டளையிடுமாறு கோரி முன்னாள் இராணுவத்தளபதி அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

கொழும்பு உயர் நீதி மன்றத்தில் ஜெனரல் பொன்சேகா நேற்றுத் தாக்கல் செய்த இந்த மனுவில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவத்தளபதி ஜகத் ஜயசூரி, பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய, ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க, சட்டமா அதிபர் (15ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் உறுப்பினர் தெரிவில் மாற்றமில்லை

### தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

2010ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் எதிர்பார்க்கப்படும் நாடாளுமன்றத்திற்கான தேர்தலில் வடக்கு கிழக்கு மாவட்டங்களில் இருந்து தெரிவாகும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மாற்றம் இல்லை என அறிவிக்கப் பட்டுள்ளது. இது தொடர்பான அறிவித்தலை தேர்தல்கள் (15ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அதிபர் சேவை தரம் III

### எழுத்துப் பரீட்சையில் 94 புள்ளி பெற்றோர் நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள முடியும்

(திருகோணமலை)

இலங்கை அதிபர் சேவை தரம் III இற்கு பதவியுயர்வு வழங்குவதற்காக நடத்தப்பட்ட எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை ஆகியவற்றில் மொத்தமாக 142 புள்ளிகள் அல்லது அதற்கு மேற்பட்டதாக எடுத்திருப்பதுடன், அதில் எழுத்துப் பரீட்சையில் மாத்திரம் 94 புள்ளிகள் அல்லது (16ஆம் பக்கம் பார்க்க)

உலக எயிட்ஸ் தினம்–World AIDS Day 2009
HIV/AIDS தொடர்பில் உலகளாவிய வசதிகளை ஏற்படுத்துதலும், மனித உரிமைகளை மதித்தலும் 'Universal Access and Human Rights'

HIV/AIDS என்பது,
மனிதனது நோயெதிர்ப்பு சக்தியை இழக்கச் செய்யும் ஒரு குறைபாட்டு நிலைமை, இதற்கு தடுப்பூசியோ குணமாக்குவதற்கு மருந்துகளோ கிடையாது, நோய் ஏற்பட்டால் மரணம் நிச்சயம், ஒவ்வொருவரும் விழிப்பாக இருப்பதன் மூலம் தம்மைப் பாதுகாக்க முடியும்.
HIV தொற்று என்பதற்கும் AIDS என்பதற்குமிடையிலான வேறுபாடு என்ன?
HIV தொற்று என்பது ஒருவரது உடலில் HIV கிருமி தொற்றியுள்ள நிலை.
AIDS நோயென்பது HIV கிருமித் தொற்றால் அவரது நோயெதிர்ப்பு சக்தி இழக்கப்பட்ட நிலை.
HIVதொற்றுக்குள்ளான ஒருவர் பல வருடங்கள் வரை நோயாளியாகாமல் பலருக்கும் நோயைப் பரப்பிக் கொண்டிருப்பார்.
HIV தொற்றி AIDS ற்குரிய நோயறிகுறிகள் தோன்ற பல வருடங்கள் எடுக்கும்.
(வளர்ந்தவர்களில் 8–12 வருடங்கள், சிறுவர்களில் 2–5 வருடங்கள்)

ஆக்கம்
சுகாதார சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணம்.

அனுசரணை- TRRO

UNHCR
நிதியுதவி UNHCR

(C-3776)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 2008ஆம் ஆண்டு காணாமல் போனோரில் 22பேர் இனங்காணப்பட்டுள்ளனர்

## -யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு தகவல்-

(யாழ்ப்பாணம்)

காணாமல் போனோர் தொடர்பாக கடந்த 2008 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் 22 பேர் இனங் காணப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணமனித உரிமைகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

காணாமல் போனோர் தொடர் பான மேலதிக தர வுகளைப் பெற்று க்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போதே உறவினர்கள் மூலம் இவர்கள் இனங் காணப் பட்டுள்ளனர்.

இவர்கள் முகாம்கள், சிறைச்சாலைகள், உறவினர் வீடுகள் மற்றும் வெளிநாடுகளில் இருப்பதாக அறியப்பட்டுள்ளது.

இது தொடர்பாக 2008ஆம் ஆண்டு காணாமல் போனவர்கள் தொடர்பான மீள் தகவல் சேகரிப்பு நடவடிக்கைகள் பூர்த் தியடைந்துள்ளதாகவும் 2007ஆம் ஆண்டு காணாமல் போனோர் தொடர்பான மீள் தகவல் சேகரிக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் 2006ஆம் ஆண்டு காணாமல் போனோர் தொடர்பான தகவல் சேகரிக்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவுள்ளதாகவும் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப் பாளர் தெரிவித்துள்ளார். (ஓ-14,7)

# கிணற்றுக்குள் தவறி விழுந்த மூதாட்டி மரணம்

வட்டுக்கோட்டையில் மூதாட்டி ஒருவர் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து மரணமடைந்துள்ளார். இச் சம்பவம் நேற்றுக் காலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வட்டுமேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கந்தையா பரமேஸ்வரி என்ற 81வயது மூதாட்டி நேற்று அதிகாலை நீர் அள்ளுவதற்காக கிணற்றடிக்குச் சென்ற போது அவர் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இவரது சடலம் பிரேத பரிசோதனைகளிற்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-14,7)

# கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 2 ஆயிரம் பேர் டிசம்பரில் மீள் குடியமர்வு

## அரச அதிபர் தகவல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 8 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 2ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் டிசம்பர் முதலாம் திகதி மீள் குடியமர்த்தப்படவுள்ளனர் என கிளிநொச்சி அரச அதிபர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களில் கிளிநொச்சி மாவட்டத்தில் 8 கிராமங்களைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் பேருக்கு மேற்பட்டவர்கள் எதிர்வரும் முதலாம் திகதி மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இதில் கனகபுரம், ஜெயந்திபுரம், பெரிய பரந்தன், உருத்திர புரம் கிழக்கு, திருநகர் தெற்கு, திருநகர் வடக்கு, உதயநகர் கிழக்கு, உதய நகர் மேற்கு ஆகிய 8 கிராம சேவையாளர் பிரிவுகளிலேயே மீள்குடியமர்த்தப்படவுள் ளனர்.

இம் மக்களை எதிர்வரும் முதலாம் திகதி வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து அழைத்து வந்து கிளிநொச்சி மகா வித்தியா லயத்தில் தங்கவைத்து பின் மீள் குடியமர்த் தப்படுவர்.

அத்துடன் எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து கிளிநொச்சி மாவட்ட செயலகம் உட்பட பல அரச திணைக்களங்கள் தமது பணிகளை சொந்த இடங்களில் ஆரம்பிக்கும்.

தற்போது கிளிநொச்சி தபாற்கந்தோர் இயங்குவதுடன் நீர்ப்பாசனத் திணைக்களம் இன்று தனது பணிகளை ஆரம்பிக்கவுள்ளது என கிளிநொச்சி அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ச-5)

# ஏ-9 பாதை ஊடாக சேவையில் ஈடுபடும் பாரவூர்திகளுக்கு நடைமுறை அறிவிப்பு


(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இருந்து கொழும்புக்கு தொடரணி சேவையில் ஈடுபடுவதற்கு விரும்பும் பாரவூர்தி உரிமையாளர்கள் ஏ-9 தொடரணி ஊடாக சேவையில் ஈடுபடுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே ஏ-9 தொடரணி சேவையில் யாழ்ப்பாணத்தில் இருந்து பொருட்களை கொண்டு செல்வதற்கும் கொழும்பில் இருந்து பொருட்களை கொண்டுவருவதற்கும் சேவையில் ஈடுபட விரும்பும் பாரவூர்தி உரிமையாளர்கள் பின்வரும் நடைமுறையினை பின்பற்றி தொடரணி சேவையில் ஈடுபடமுடியும் என அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

* தொடரணியில் ஈடுபடவிரும்பும் பாரவூர்தி புறப்படும் தினத்தன்று காலை 6.30 மணிக்கு முன்னர் நாவற்குழி களஞ்சியத்தில் தமது பதிவனை மேற்கொள்ளல் வேண்டும்.
* யாழ்ப்பாணத்தில் இருந்து பொருட்களை ஏற்றிச்செல்ல விரும்பும் பாரவூர்திகள் தொடரணி சேவையில் புறப்படுவதற்கு முதல்நாள் நாவற்குழி களஞ்சியத்திற்கு பொருட்களை எடுத்துச் சென்று அவை பாதுகாப்பு அதிகாரிகளால் பரிசீலனை செய்யப்பட்டு பாரவூர்திகளில் பொருட்களை ஏற்றிய பின்னர் மறுநாள் காலையில் தொடரணியில் இணைந்து கொள்ளமுடியும்.
* தொடரணிசேவையில் ஈடுபடும் பாரவூர்திகள் பாரவூர்தியின் பதிவுப்புத்தகம் நடப்பாண்டுக்குரிய வரி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், வாகன தகைமைச் சான்றிதழ் என்பவற்றின் மூலப்பிரதியை வைத்திருத்தல் வேண்டும்.
* பாரவூர்தியின் சாரதி, உதவியாளர், கொள்வனவு உத்தியோகத்தர் தனது அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய அடையாள அட்டையினையும் அதன் பிரதியையும் வைத்திருத்தல் வேண்டும்.
* தொடரணியில் செல்லும் பாரவூர்திகள் அனைத்தும் நாவற்குழி களஞ்சியத்தில் சீல் இடப்பட்டு பின்னர் தொடரணியில் இணைந்து செல்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

(ச)



வலிகாமம் பகுதியில் டயலொக் நிறுவனத்தின் முகவர் நிலையத்திற்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள விளம்பர வளைவை படத்தில் காணலாம். இவ் வளைவு கண்கவர் வடிவில் அமைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவு அரச பணியாளர்களை மீளக்கடமைக்குத் திரும்ப பணிப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றுகின்ற மற்றும் கடமையாற்ற அனுமதி கோரியுள்ள அனைத்து அலுவலர்களையும் முல்லைத்தீவு மாவட்டத்தில் தமது கடமையைப் பொறுப்பேற்குமாறு முல்லைத்தீவு அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே இடம்பெயர்ந்து யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றுகின்ற அனைத்து அலுவலர்களும் தற்போது கடமையாற்றுகின்ற அலுவலகங்களில் இருந்து விடுவித்தல் கடிதங்களை பெற்று முல்லைத்தீவு அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு தமக்குரிய கடமை நிலையங்களில் கடமையைப் பொறுப்பேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

(ச)


**Computer Express**
**Institute of Information Technology**



கணனி ஆர்வலர்களே!
பாடசாலை மாணவர்களே!
ஊழியர்களே! தங்கள் நலன்கருதி
யாழ்நகரில் முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன்
தொழில்சார் கணனி கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன...

- Professional Diploma in Microsoft Office — 3500/= — 3 Months
- Diploma in Printing Technology & Desk top Publishing — ~~22500/=~~ 4500/= — 4 Months
- Diploma in Server Technology & Web Page Designing — ~~22500/=~~ 4500/= — 3 Months
- Diploma in Graphic Designing & Adverdisement Marketing — ~~22500/=~~ 4500/= — 4 Months
- Diploma in Hardware Engineering & Net working — ~~20000/=~~ 4000/= — 3 Months
- Diploma in Computerized Accounting & E-Commerce — ~~22500/=~~ 4500/= — 3 Months
- Diploma in Computer Science & Programming — ~~22500/=~~ 4500/= — 4 Months
- Diploma In Auto CAD & Arcetecture Designing — ~~22500/=~~ 4500/= — 3 Months
- Honours Diploma in Information Technology — ~~32500/=~~ 6500/= — 6 Months

80% off

100% செய்முறைப்பயிற்சி
ஒவ்வொரு மாணவர்கள் மீதும்
தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்
அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்

**50 % Advance Courses**
Diploma in Film Technology & Video Editing ~~10000/=~~ 5000/= — 4 Months
Diploma in Studio Technology & Multy Media ~~9500/=~~ 4750/= — 4 Months

எமது ஆய்வுகூடத்தில் கம்யூட்டரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம்செய்வதால் கம்யூட்டர் பற்றிய முன்னறிவு அவசியமில்லை.

No.167, Kasthuriyar Road, Jaffna.
Tel: 021 222 8250
(C-3775)

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

| | |
|---|---|
| Batch I | 27.11.2009 10.00 am or 2.00 pm |
| Batch II | 28.11.2009 10.00 am or 4.00 pm |
| Batch III | 29.11.2009 10.00 am or 2.00 pm |
| Batch IV | 02.12.2009 10.00 am or 2.00 pm |

**வர்ணக் கலண்டர் மலிவு விலையில்**
அழகிய வர்ணக் கலண்டர்கள் வர்த்தக விளம்பரம் பொறித்து மலிவு விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
**சரவணா அச்சகம்**
233, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C-3774)

**ராஜீ திருமணசேவை**
யாழ். இந்து உயர் கௌரவ குடும்பம் 43 வயது தாரக்குற்றம், அத்த நட்சத்திரம் 30பாவம் செவ்வாய் குற்றமற்ற அமெரிக்கா P/R உடைய பொறியியலாளர் மணமகனிற்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை.
தொடர்பு: 158/3, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021-373 5980, 077 4745647
(3982)

**காயத்திரி பப்ளிகேஷனின்**
பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு
யாழ். அன்னை புத்தகசாலை அனுசரணையில் மாபெரும்
**புத்தகப் பெருவிழா**
எதிர்வரும் நவம்பர் 29, 30, டிசம்பர் 1 ஆந்திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.
கழிவு 30% வரை
அனுமதி இலவசம்
காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை
சிறுவர் நூல்கள், புலமைப் பரிசில் நூல்கள், பொது நூல்கள், பயிற்சி நூல்கள், கனினி நூல்கள், பாடசாலை உபகரணங்கள், இலக்கிய நூல்கள், மலிவு விலையில்...
பாடசாலை மாணவர்களுக்கு, நூலகங்களுக்கு விசேட விலைக்கழிவு
காயத்திரி பப்ளிகேஷன் கொழும்பு
011-4981906, 072 7374750
(C-3777)

# விலைக் கேள்விகளுக்கான கோருதல் கட்டடங்கள் திணைக்களம் , வடமாகாணம், யாழ்ப்பாணம்

1. சிவில் நிர்வாகத்தை வலுவூட்டும் திட்டத்தின் கீழ் தவிசாளர், மாவட்ட பெறுகைக் குழு அவர்களால் கீழே அட்டவணைப்படுத்தப்பட்ட வேலைகளுக்காக தகவுடைய மற்றும் தகைமை பெற்ற கேள்விதாரர்களிடமிருந்து மூடிக் குறியீடு செய்யப்பட்ட கேள்விகள் கோரப்படுகிறது.
2. கேள்வியானது தேசிய போட்டிக் கேள்வி நடைமுறைப்படி நடாத்தப்படும்.
3. ஒப்பந்த வழங்கலிற்கு தகுதி பெறுவதற்கு ,வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலிடப்படாதவராகவும், நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவகத்தில் கட்டட நிர்மாணத் துறையில் கீழே அட்டவணைப்படுத்தப்பட்ட வேலைகளுக்கான குறித்த பதிவை அல்லது அதற்கு மேற்பட்ட பதிவை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்த வழங்கலிற்கான தகைமையைப் பெறுவதற்குத் தேவையான தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக் கேள்வி ஆவணத்தின் பகுதி-4 இலும் மேலதிக தகவல்கள் விலைக்கேள்வித் தரவிலும் (பகுதி-5)கொடுக்கப்பட்டுள்ளன.
5. ஆர்வமுள்ள கேள்வி தாரர்கள் மேலதிக தகவல்களை **பிரதம பொறியியலாளர் ,பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (வமா) , கடற்கரை வீதி, குருநகர்,யாழ்ப்பாணம் (தொ.பேசி,தொ. நகல் இல.021 222 2632)** இலிருந்து பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் விலைக்கேள்வி ஆவணங்களை மேற்கூறிய முகவரியில் காலை 9.00 மணியிலிருந்து பி.ப 4.00 மணி வரை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து மீளளிக்கப்படாத வைப்புப்பணம் ரூபா 1,000 .00 ஐ பிரதம **பொறியியலாளர் அலுவலகம் , கட்டடங்கள்திணைக்களம் (வ மா) , கடற்கரை வீதி , குருநகர் , யாழ்ப்பாணத்தில்** பணமாகச் செலுத்துவதன் மூலம் 25 .11.2009 ஆம் திகதியிலிருந்து 14.12.2009 ஆம் திகதி வரை காலை 9 .00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை ஆங்கில மொழியிலான பூரண தொகுதிக் கேள்வி ஆவணம் ஒன்றைப்பெற்றுக்கொள்ளலாம்.
7. கேள்விகள் இரண்டு பிரதிகளில் கீழ்வரும் மாவட்ட பெறுகைக்குழு முகவரியில் (மாவட்டச் செயலகம்) 17.12.2009 ஆம் திகதியன்று பி.ப 3.00 மணி அல்லது அதற்குமுன்னராக பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிக்கப்படல் வேண்டும் . காலந் தாழ்த்தி சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும். பெறப்பட்டகேள்விகள் உடனடியாகவே வருகைதர விரும்பும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் திறக்கப்படும்.
8. கேள்விகளுடன், அட்டவணையில்.கொடுக்கப்பட்ட தகவல்கலிற்கமைய கேள்விப்பிணைப்பத்திரம் இணைக் கப்படவேண்டும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பிடப் பட்ட செலவு (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையன ICTAD தரம் (கட்டடங்கள்) | விலைக் கேள்வி பிணைப் பொறுப்பு | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைத் தொகை | செல்லுபடியா கும் காலம் |
| JF/BD/GA/ QUR 02/2009 | பிரதேச செயலாளருக்கான விடுதி அமைத்தல், பருத்தித்துறை | 6.82 | 4 மாதங்கள் | M6/C7 | 68,300.00 | 31.03.2010 |
| JF/BD/GA/ DTC 01/2009 | மாவட்ட பயிற்சி நிலையம் அமைத்தல் யாழ்ப்பாணம் கட்டம் I | 6.36 | 4 மாதங்கள் | M6/C7 | 63,700.00 | 31.03.2010 |

**பிரதம பொறியியலாளர் , அலுவலகம்,**
**கட்டடங்கள் திணைக்களம் ,**
**வடமாகாணம்,**
**கடற்கரை வீதி , குருநகர் , யாழ்ப்பாணம்.**
**தொ. பேசி. இல.021 222 2632**

**க.கணேஷ்**
**தவிசாளர், மாவட்ட பெறுகைக்குழு /**
**அரசாங்க அதிபர்,**
**மாவட்டச்செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

(சி. 3772)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை பி.ப 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் பூ. சக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் என்.கே. சிவாஜிலிங்கமும் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக வடமராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) செ.உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளார். (இ)

## பொதுநலவாயமைப்பு மாநாட்டில் பிரதமர் பங்கேற்பு

(கொழும்பு)

பொது நலவாய அமைப்பின் 21ஆவது மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பிரதமர் ரட்ண சிறி விக்கிரமநாயக்கவும் வெளிவிவகார அமைச்சர் ரோகித்த போகொல்லாகமவும் மேற்கிந்திய தீவுகளுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்கின்றனர்.

பொதுநலவாய அமைப்பின் 21ஆவது மாநாடு டி.ரி.னி.டாட்டோபாகோவில் நேற்று ஆரம்பமாகியது. இம் மாநாட்டில் இலங்கை சார்பாக இவர்கள் இருவரும் கலந்துகொள்கின்றனர்.

பொதுநலவாய அமைப்பின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெறும் மாநாட்டில் கால நிலை மாற்றம் , சர்வதேச பொருளாதாரம் மற்றும் அகதிகள் விவகாரம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளன.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க எதிர்வரும் 27ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரையான இறுதி 3 நாட்களும் மாநாட் டில் கலந்துகொள்வார் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது. (ஓ-4)

## கல்வி நிறுவனங்களில் கையடக்கத்தொலைபேசி பாவனையை தடைசெய்யவேண்டும் சாயிபாபா

(கொழும்பு)

புட்டபாத்தியில் உள்ள பிரசாந்தி நிலையத்தில் சாய்பாபா பிறந்தநாள் கொண்டாடப்பட்டது.

இந்நிலையில் ஆச்சிரமத்தில் நடந்த சத்தியசாயி பல்கலைக்கழக ஆண்டு விழாவில் பாபா கலந்துகொண்டு பேசும் போது சமீபகால கையடக்கத் தொலை பேசி மூலம் மாணவ சமூதாயம் சீரழிந்து வருகிறது அவர்கள் கையடக்கத் தொலை பேசியில் பார்க்கக்கூடாத விஷயங்களை அதிகம் பார்க்கிறார்கள். கேட்கக்கூடாதவற்றைக் நிறையக் கேட்கிறார்கள்.

இது அவர்களது முன்னேற் றத்தை கடுமையாகத் தடுக்கும். எனவே கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் கைய டக்கத்தொலைபேசி பயன்படுத்தத் தடை விதிக்க வேண்டும் என்று தெரிவித்தார். (ஓ-4)



மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய இணையத்தளம் திறப்பு விழாவில் இளைப்பாறிய ஆசிரியை திருமதி ம.பத்மநாதன் மங்கல விளக்கேற்றுவதையும்,அருகில் வித்தியாலய அதிபர் வே. விநாயகமூர்த்தி, இளைப்பாறிய உப அதிபர் ம.அருணாசலம், சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட தென்மராட்சிக்கல்வி வலயம் ஐ.சி.ரி. இணைப்பாளர் எ.கதிர்காமநாதன் கௌரவ விருந்தினராக கலந்துகொண்ட இளைப்பாறிய உப அதிபர் நா. சிவகுரு மற்றும் யாழ்ப்பல்கலைக்கழக விரிவுரையாளர் க.சியந்தன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.


## மனித உரிமைகள் தினம் டிசெம்பர் 10-2009

### மகளிர் அபிவிருத்தி நிலையம் நடாத்தும் ஓவியப் போட்டி

ஓவியத்தின் கருப்பொருள் இடம்பெயர்வின் அலுவலகங்களையும் மனித உரிமை மீறல்களையும் காட்டுவதாக அமைதல் வேண்டும்

பங்கு பற்றுபவர்கள்

**பிரிவு 1 தரம் 10-13 மாணவர்கள்**
**பிரிவு 2 ஆர்வமுள்ள பொதுமக்கள் , நிறுவனங்கள்**
**பிரிவு 3 உயர்கல்வி நிறுவனமாணவர்கள்**

ஓவியங்கள் வரைதற்குரிய பொருட்களை மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் பெற்றுக்கொள்ளவும் வரையப்பட்ட ஓவியங்களை டிசம்பர் 5ஆம் திகதிக்கு முன் ஓவியங்களை எமது நிலையத்தில் ஒப்படைக்கவும்.

தெரிவு செய்யப்படும் ஓவியங்களுக்கு சன்மானமும் பங்குபற்றும் மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும்.

**அனுப்பவேண்டிய முகவரி :-**
**மகளிர் அபிவிருத்தி நிலையம்,**
**இல.07 இரட்ணம் ஒழுங்கை, கே.கே.எஸ். றோட்,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**
**தொ.பே. 021 222 4398**

(3077)

## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட அபிவிருத்தியினை நோக்கமாகக் கொண்டு யாழ். நகரமைய றோட்டறிக் கழகம் தரம் -B (divison-B) அணிகளுக்கிடையிலான மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியினை நடத்தவுள்ளது.

இப்போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை ரமணன் ஸ்டோர்ஸ் 391, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு 077 7167887, 077 8460089 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் விண்ணப்ப படிவங்களை எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் றோட்டறிக் கழக செயற்திட்ட இயக்குனர் சி. வல்லவக்குமரன் கேட்டுக் கொள்கின்றார். (ஓ-9)

## காயத்திரி பப்ளிகேஷனின் மாபெரும் புத்தகப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

காயத்திரி பப்ளிகேஷன் தனது பத்தாண்டு நிறைவை முன்னிட்டு மாபெரும் புத்தகக் கண்காட்சியையும் விற்பனையையும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. நவம்பர் 29,30 ஆம் திகதிகளிலும், டிசம்பர் முதலாம் திகதியும் இப்புத்தகக் கண்காட்சிகள் காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு காயத்திரி பப்ளிகேஷனின் புத்தக கொத்து அறிமுக விழா நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் முக்கிய அரசியல் வாதிகள், அதிகாரிகள், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், கல்விமான்கள் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளும் காயத்திரி பப்ளிகேஷனால் இதுவரை வெளியிடப்பட்ட 150க்கு மேற்பட்ட நூல்களின் அறிமுகம் புத்தகக் கொத்து அறிமுகம் நடைபெறும்.

கண்காட்சியில் சிறுவர் நூல்கள், கணனி நூல்கள், புலமைப்பரிசில் நூல்கள், கதைப் புத்தகங்கள், பாடல் நூல்கள், சிங்களம் கற்பதற்கான நூல்கள், சிங்கள நூல்கள் காட்சிப் படுத்தப்படவுள்ளன. பாடசாலைகளுக்கும் மாணவர்களுக்கும் நூலகங்களுக்கும் விசேட விலைக்கழிவில் புத்தகங்கள் வழங்கப்படுவதோடு, பாடசாலைகள் கண்காட்சியைப் பார்வையிட விசேட ஒழுங்குகள் செய்து தரப்படும் என்றும் விபரங்களுக்கு 0727374750 என்ற தொலைபேசி இலக்கத்தோடு தொடர்பு கொள்ளலாம் என்றும் ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்களை வெளிக்கொண்டு வரும் முயற்சிக்கு ஆக்கங்களை கொழும்பில் இருந்து வரும் குழுவினரிடம் கையளிக்கவும் முடியும் என்றும் காயத்திரி பப்ளிகேஷன்ஸ் தெரிவித்துள்ளது. (ஓ)

## வர்த்தக நிலையங்களால் அழகுறக் காட்சியளிக்கும் தீவகம் வடக்கு நவீன சந்தை

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச நவீன சந்தை தற்பொழுது இலங்கை வங்கி ஊர்காவற்றுறைக் கிளை மற்றும் வர்த்தக நிலையங்களால் அழகுறக் காட்சியளிக்கின்றது.

கொழும்பு, கண்டி வர்த்தகர்களும் தங்களது வியாபாரத்தை நவீன சந்தையில் ஆரம்பித்துள்ளனர்.

மணிக்கடை, பல்பொருள் வியாபாரக் கடை குளிர்பானக்கடை, ஆகியனவும் இங்கு நிறுவப்பட்டுள்ளன.

சுரண்டும் சீட்டு (ரிக்கற்) விற்பனையும் நடைபெற்று வருகின்றது. (ஓ-72)




## தனியார் பஸ்களில் ரிக்கற் இன்றி பயணிப்போருக்கும் நடத்துனருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தனியார் பஸ்களில் ரிக்கற் இன்றி பயணம் செய்யும் பிரயாணிகளிடம் தண்டப் பணம் அறிவிடப்படும். பயணிகளுக்கு ரிக்கற் வழங்காத நடத்துனர் மீது தண்டப்பணம் அறிவிடப்படுவதுடன் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வி. பத்மநாதன் அறிவித்துள்ளார்.

தனியார் சிற்றூர்திச் சேவையில் ஈடுபடும் பஸ்களில் பயணம் செய்வோர் எதிர்கொள்ளும் நெருக்கடியை தவிர்க்கும் நோக்குடன் ரிக்கற் வழங்கும் நடைமுறை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

எனவே பயணிகள் நடத்துனர்களிடம் 'ரிக்கற்' றை கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும். நடத்துனர்களும் உரிய முறையில் 'ரிக்கற்' வழங்க வேண்டும்.

ரிக்கற் இல்லாமல் பயணம் செய்யும் பிரயாணிகளிடம் பயணத் தூரத்துக்கான கட்டணத்தின் இருமடங்கு அறவிடப்படுவதுடன் 250 ரூபா தண்டமாக அறவிடப்படும்.

பயணச் சீட்டு வழங்காத நடத்துனருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் 500 ரூபா அபராதமும் விதிக்கப்படும். சாரதி மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே பயணிகள் இந்த விடயத்தில் விழிப்பாக இருந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நடத்துனர்களிடம் 'ரிக்கற்' கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

பயணச் சீட்டு வழங்காதவிடத்து அது தொடர்பாக முறையீடு செய்ய வேண்டும். முறைப்பாடு செய்யும் போது மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளும் என மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள யாழ். மாவட்ட உதவியாளர் அறிவித்துள்ளார். (ஓ-4)

## போஷாக்கு உணவு வழங்கும் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தல் தொடர்பான நடவடிக்கை

(அல்வாய்)

கல்வி வலய ரீதியாக முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் உள்ளடக்கப்படும் மாணவர்கள் அல்லது பயிற்சியாளருக்கு மகிந்த சிந்தனையின் நிமித்தம் போசாக்கு உணவு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பாடசாலை நேரத்தில் ஒழுங்கான திட்டத்தின் கீழ் நடைபெறும் செயற்பாடுகள் உள்ளடக்கப்படும் ஒருவருக்கு 19 ரூபா பெறுமதியான காலை உணவு இத்திட்டத்தில் வழங்கப்படவுள்ளது.

இதற்கமைவாக இவ்வாறு செயற்படும் முறைசாராக் கல்வி நிலையங்களின் விபரங்களை இணைக்கப்பட்ட மாதிரிக்கமைவாக தயாரித்து மாகாணக் கல்வித் திணைக்களத்தில் சமர்ப்பித்து இச் செயற்பாட்டுக்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா தெரிவித்துள்ளார். (ஓ-19)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள நல்லூர், கொழும்புத்துறை, அரியாலை ஆகிய பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி A.R.V. கட்டம் கட்டமாக ஏற்றப்படவுள்ளது.

இதனடிப்படையில் நாளை வெள்ளிக்கிழமை பின்வரும் இடங்களில் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. காலை 9 மணிமுதல் 11 மணிவரையும் நல்லூர் பொது சுகாதார பிரிவுக்குட்பட்ட கோவில் வீதி கம்பன் கோட்டம் அருகேயும் முற்பகல் 11.30 மணிமுதல் 1.30 மணிவரையும் நல்லூர் கோவில் வடக்கு வீதியிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

அத்துடன் கொழும்புத்துறை பொதுச் சுகாதார பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காலை 9 மணிமுதல் 11 மணிவரை கந்தர் மணியம் வீதியிலும் நண்பகல் 11.30 இலிருந்து 1.30 மணிவரையும் கொழும்புத்துறை கிழக்கு சனசமூக நிலையத்திலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

மேலும் அரியாலை பொதுச் சுகாதார பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை புங்கங்குளம் சனசமூக நிலையத்திலும் நண்பகல் 11.30 மணி முதல் 1.30 மணிவரை சரஸ்வதி சனசமூக நிலையம் கண்டிவீதி, அரியாலை ஆகிய இடங்களிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத்தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம. மரியதாசன் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-9)

## மீளக்குடியமர்ந்த யாழ் மாவட்ட மீனவர்களின் விபரம் திரட்டல்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாக கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களப் பணிப்பாளர் கே. தர்மலிங்கம் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மீனவர்களிற்குரிய இயந்திரம், வலை, கடற்கலம் போன்ற மீன்பிடி உபகரணங்கள் வழங்குவதற்காகவே இம் முன்னேற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையான காலப்பகுதியில் 4 ஆயிரத்து 278 மீனவர்கள் பதிவுகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-14-7)



வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவின் சர்வதேச சிறுவர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கரித்தாஸ் கியூடெக் பணிப்பாளர் அருட்தந்தை கி.யோ. ஜெயக்குமார் உரையாற்றுவதையும், பிரதேச செயலர் சி.ஏ. மோகனராஸ் சிறுவர் கழக உறுப்பினர் ஒருவருக்குப் பரிசளிப்பதையும் சிறுவர்களின் கலை நிகழ்ச்சியையும் படத்தில் காணலாம்.

# விஜயநகரப் பேரரசுக் காலச் சமுதாயமும் பண்பாடும்

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

61

**திரு.மங்கள முருகேசன்**

**சமூதாயம்**

பதின்மூன்றாம் நூற்றாண்டிலேயே இஸ்லாமியர் குடியேறி விட்டனர். என்ற போதிலும் அவர்களுடைய வருகை தமிழ்ச் சமூதாய வரலாற்றில் பதினெட்டாம் நூற்றாண்டு வரையில் குறிப்பிட்டுப் பெரிதாகக் காட்டத் தகுமாறுதல் எதனையும் விளை வித்து விட வில்லை. ஆனால் விஜயநகர ஆட்சி தமிழகத்தில் பரவிய பின்னர் தமிழ்ச் சமுதாயம் கலை ஆகியவற்றில் பெரும் மாறுதல்கள் விளைந்ததைக் காண்கின்றோம்.

பதினான்காம் நூற்றாண்டு வரை தமிழ் மொழி பேசுவோரை தமிழகத்தில் பெரும்பான்மையினராக விளங்கினர். ஆனால் அதன் பின்னர் தெலுங்கு , கன்னடம் ஆகிய மொழி பேசுவோர் உட்புகுந்தனர். இன அடிப்படையில் பார்த்தால் இம் மக்கள் திராவிடர்கள்தான். ஆனால் பண்பாட்டு அடிப்படையில் நோக்கினால் அவர்களுடைய மொழி வாழ்க்கைக் கூறு ஆகியவற்றில் ஆரியக் கூறுகள் மிகுதிருந்தன. தமிழில் மக்கள் தாம் தெலுங்கும் , கன்னடமும் என்றாலும் ஆரியக் கணவராம் வடமொழியை மணந்து அவை இலக்கணம் முதல் இலக்கியம் வரையிலும் ஆரியக் கூறுகளை நிரப்பிக் கொண்டு விட்டனர் தமிழ்ப் பெண் இஸ்லாமியரை மணந்து நெற்றிக்குப் பொட்டிடாமல் தலைக்கு முக்காடிட்டு வாழ்வது போன்ற நிலை என்று இதனைக் கூறலாம்.

பதினேழாம் நூற்றாண்டில் பல்வேறு மொழி இனம் சமயம் ஆகியவற்றைக் கொண்டதாகத் தமிழ்ச் சமூகத்தை இஸ்லாமியர், கிறிஸ்தவர் , சௌராட்டிரர் வருகை மாற்றியது. பதினேழாம் நூற்றாண்டு இதன் தொடக்கமாக அமைந்தது. எனினும் இந்துக்கள் பெரும்பான்மையோர் என்ற நிலையில் மாறுதல் இல்லை. பதினேழாம் நூற்றாண்டினைக் குறித்த சமுதாயவரலாறு தெளிவாகக் கூறும் ஆய்வு சமீபகாலம் வரை இல்லாமல் இருந்தது. சென்னைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் சி.ஈ.இராமச்சந்திரன் மேற்கொண்ட முறையான ஆய்வு 17ஆம் நூற்றாண்டில் சமூதாய பண்பாட்டு வரலாற்றினை தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. இந்த ஆய்வேடு 17ஆம் நூற்றாண்டினைப் பற்றியது எனினும் அதற்கு முன்னும் பின்னும் உள்ள தலைமைகளை எடுத்துக்காட்டுவது நமக்குத் துணை புரிகிறது.

சமுதாயப் பிரிவுகளைப் பொறுத்த மட்டில் பல பிரிவுகளைக் கொண்டதாக விளங்கியது. பிராமணர் , வேளாளர் ,செட்டிகள், சேணையங்காடிகள், கைக் கோளர்கள் ,ஸ்ரீ கோபாலர்கள் ஆகியோர் தலையாய சாதிப் பிரிவினர். இப்பிரிவினுள் பல உட்பிரிவுகள் இருந்தன. சௌராட்டிரர் ,இஸ்லாமியர், கிறிஸ்தவர் தமிழகச் சமுதாய அமைப்பில் கலந்ததன் விளைவு பிற பண்பாடுகளின் தாக்கத்தைக் காட்டுகிறது.

விஜயநகரப் பேரரசுக் காலத்திற்குப் பின்னர் பிற மொழிகளைப் பேசக்கூடிய ஆரிய அமைப்பில் தலையாய பிரிவினரான பார்ப்பனர்கள் அல்லது பிராமணர்கள் தமிழக த்தில் குடியேறினார்கள். பதினாறாம் நூற்றாண்டிலேயே சமுதாய விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. ஏனெனில் இப் பார்ப்பனர்கள் தங்களை உயர் வானவர்கள் இரு பிறவியாளர்கள் என்று கூறிக் கொண்டதையும் அரசர்களின் ஆதர வினால் தனிச்சிறப்பும் செல்வாக்கும் கொண்டு விளங்கியதையும் கண்டு ஏனைய பார்ப்பனரல்லாதவர்கள் மனம் புழுங்கினர். வேதங்களிலும் வேதாகமங்களிலும் ஸ்மிருதிகளிலும் பெற்ற தேர்ச்சியினாலும் வணிகர்களாக அமைச்சர்களாக படைத் தலைவர்களாகக் கூடச் சிலர் அமர்ந்து மேலாதிக்கம் செலுத்தினர். இதனால் பிற மக்களின் வெறுப்புக்கு ஆளாயினர். போர்த்துக்கீச வணிகர் ஒருவர் கி.பி 1537 ஆம் ஆண்டில் எழுதிய குறிப்பு ஒன்றில் பிராமணர்கள் இறுமாப்புடையவர்களாக விளங்கினர் என்று குறிப்பிடுகிறார். இந்த அடிப்படையில் டாக்டர் கே.கே.பிள்ளை குடிமக்கள் அவர்களிடம் முழுக்க முழுக்க நல்லெண்ணமும் நல்லுறவும் கொண்டிருக்க முடியாது என்று கூறுகிறார்.

**பார்ப்பனர்கள்**

சிவனை வழிபட்ட பார்ப்பனப் பிரிவினர் ஸ்மார்த்தாக்கள் என்றும் திருமாலை வழிபட்டோர் ஸ்ரீவைணவர்கள் என்றும் திருமால் , சிவன் இருவரையும் வழிபட்டோர் மத்வர்கள் என்றும் அழைக்கப்பெற்றனர் ஸ்மார்த் தாக்கள் எண்ணிக் கையில் அதிகமிருந்தனர் ஸ்ரீ வைணவர்கள் அடுத்த நிலையினர் ஸ்ரீ வைணவர்களில் வடகலை, தென்கலை என இரு பிரிவினர் இருந்தனர் . மூன்று பார்ப் பனப் பிரிவினரும் புராணங்களை ஏற்றுக் கொண்டனர் மூன்று பிரிவினருமே மார்பின் குறுக்கே முப்பிரி நூல் அணிந்திருந்தனர். பார்ப்பனர்களின் குலத்தொழில் ஓதல், ஓதுவித்தல் ஆகும். அரசுப் பதவிகளை வகித்தவர்கள் லௌகீகப் பிராமணர்கள் எனவும் வேத வேள்விகளை தர்ப்பையைக் கையிலேந்தி சாத்திர சம்பிரதாயங்களுடன் நீண்ட ஆடையை இடுப்பைச் சுற்றி அணிந்து தைத்த மேலாடை அணியாமால் வாழ்ந்தவர்கள் வைதீக பிராமணர்கள் ஆவர் கோவில்களில் ஊழியம் செய்து வந்தவர்கள் மற்றைய பிரிவினரால் மண உறவு முதலானவற்றிற்கு ஏற்கப்பெறவில்லை.

**வேளாளர்**

பார்ப்பனர்களுக்கு அடுத்த நிலையிலிருந்தவர்கள் வேள்ளாளர்கள் கோவை சேலம் சேலம் வட ஆர்காடு திருநெல்வேலி மாவட்டங்களில் நிறைந்து காணப்பெற்றனர். கார்காத்தார். சோழியர், கொடிக்கால், கோட்டை, பாண்டவர், சாய்ந்தலை, வெள்ளாளர்கள், என்று பல பிரிவினர் இருந்தனர். வெள்ளாளர்கள் , வோளர்கள் என்றும் அழைக்கப் பெற்றனர். வெள்ளாளர்கள் , வெள்ளாளர் பிரிவினர் பிற பிரிவினிடம் மண உறவு கொள்வதில்லை ஆனால் கலந்துண்ணல் உண்டு வெள்ளாளர்கள் மது மாமிசம் உண்பதில்லை. விதவை மணமும் அவர்களால் ஏற்கப்பெறவில்லை.

**கைக்கோளர்**

நெசவுத் தொழிலைக் கைக்கோளர்கள் மேற்கொண்டிருந்தனர். கைக்கோளர்கள் நெய்து வந்த தறிகளுக்கு விஜயநகர மன்னர்கள் வரி போடும் வழக்கம் இருந்தது. கைக் கோளர்களுக்கொன்று தனித் தெருக்களே இருந்தன. காஞ்சிபுரம், விருஞ்சிபுரம், திருவண்ணாமலை, முதலிய இடங்களில் பல்லக்கு ஏறிச் செல்லவும் தமக்கு முன் சங்கு ஊதப் பெறவும் புதிய உரிமைகளைப் பெற்றனர். கைக்கோளர்களிடையேயும் பல பிரிவுகள் இருந்தன. சௌராட்டிரர்களும் சொசவாளர்களே.

**பாஞ்சாலர்**

பொற்கொல்லர் கருமான் பித்தளைப் பாத்திரக்காரர் தச்சர், கல்தச்சர் முதலானவர்கள் பாஞ்சாலர்கள் என்று கூறப்பெற்றனர். பார்ப்பனர்களைப் போலப் பூணூல் அணிந்து கொண்டனர். பாஞ்சாலர்களில் சிலர் சைவ உணவுக்காரர்கள் சிலர் அசைவ உணவுக்காரர்கள் சாணர்கள் பனை வெல்லம் தயாரிக்கும் தொழில் செய்தனர். கள்இறக்கும் தொழிலும் இவர் தம் தொழிலாயிற்று கள் இறக்கும் தொழிலைச் செய்தமையால் கீழ் நிலையில் வைத்து எண்ணப் பெற்றனர்.

**இடங்கை வலங்கைப் பிரிவுகள்**

சோழர் காலத்திலிருந்து இடங்கை வலங்கைப் பிரிவினரைக் குறித்து அறிந்துள்ளோம். இடங்கை வலங்கைப் பிரிவினர் நில அளவுகோல் புதியதாக நுழைக்கப்படவே அதனை எதிர்த்துப் போராடினார்.

விஜயநகர அரசின் ஆளுநர் அவர்களை வெள்ளாளர் பார்ப்பனர் உதவியோடு அவர்களுக்குப் பணி யக் கூடாது என்று ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளச் செய்தார். இக்கிளர்ச்சி 1429ஆம் ஆண்டு வாக்கில் தமிழகத்தின் வடபகுதிக ளில் ஏற்பட்டது. இடங்கை வலங்கைப் பிரி வினர் அரசுடன் மோதியதோடு அல்லாமல் சில சமயங்களில் தமக்குள்ளே சண்டையிட் டுக் கொண்டனர். இரு வகுப்பினரும் மலை யம் பட்டுக் கல் வெட்டுப்படி முரண்பட்டுச் சண் டையிட் டனர். என அறிகிறோம் பலர் மாண் டனர். 1438 இல் இரு பிரிவினரும் திரு விழாக் களில் எவ்விதம் பங்கேற்பது என்று முடிவு செய்து கொண்டனர்.

1440இல் மற்றுமோர் உடன்பாடுஏற்பட்டது என்று அறிகிறோம். தெலுங்கு கன்னட மொழி பேசும் மக்கள் முதன்மைக்குடிகள் என்ற பெயரைப் பெற்றனர். தெலுங்கர் வரவால் தமிழக மக்கட் பிரிவினர் தம்முடைய முந்தைய தொழிலை விட்டுக்கீழ் மட்டத் தொழில்களைச் செய்தனர்.

(தொடரும்)

# சிதைவடைந்து செல்லும் அரசாங்கத்துக்கு ஐக்கிய தேசிய முன்னணி ஆதரவளிக்காது

## டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன

(கொழும்பு)

சிதைவடைந்துள்ள அரசாங்கத்திற்கு எதிர்க்கட்சிகள் ஒரு போதும் ஆதரவளிக்காது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் இணைந்து கொள்ளுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன விடுத்த வேண்டுகோளை ஜக்கிய தேசியக்கட்சியோ அல்லது வேறும் எதிர்க்கட்சிகளோ ஏற்றுக் கொள்ளாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மக்களினால் நிராகரிக்கப்பட்டுள்ள ஓர் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதனைத் தவிர வேறு வழியில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பல சந்தர்ப்பங்களில் தமது கட்சி அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க முன்வந்த போதிலும் அந்த சந்தர்ப்பங்களில் அரசாங்கம் குறுகிய அரசியல் இலாபங்களை அடைந்து கொள்வதற்கே முயற்சி மேற்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே சிதைவடைந்து செல்லும் ஓர் அரசாங்க்திற்கு ஐக்கிய தேசிய முன்னணியின் எந்தவொரு கட்சியும் ஆதரவளிக்காது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஓ-4)

# இலங்கை அகதிகளின் பிள்ளைகளுக்கு உயர் கல்வியை இலவசமாக வழங்க சென்னை பல்கலைக்கழகம் தீர்மானம்

இந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டில் வாழ்ந்து வரும் இலங்கை அகதிகளின் பிள்ளைகளுக்கு பட்டப்படிப்புபட்டப்பின் படிப்பு மட்டங்களில் உயர் கல்வியை இலவசமாக வழங்குவதென சென்னை பல்கலைக்கழகம் தீர்மானித்துள்ளது.

இந்தியாவில் வாழ்ந்து வரும் இலங்கை அகதிகளின் பிள்ளைகளில் தொலைக்கல்வி அடிப்படையில் உயர் கல்வியைப் பெற விரும்புவோருக்கு அடுத்த கல்வி ஆண்டிலிருந்து சென்னை பல்கலைக்கழகம் இந்த இலவச உயர் கல்வியை வழங்க இருக்கிறது.

அகதிகள் பிரச்சினைக்கு தீர்வு காண அரசியல் வழிமுறை மட்டும் போதாது இந்த அகதிகள் மிகவும் பாதிக்கப்பட்டவர்களாவர். இவர்களது வாழ்க்கையை மேம்படுத்த சிறந்த கல்விக்கான வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதே தக்க வழியாகும் என்று பல்கலைக் கழக துணைவேந்தர் ஜி.திருவாசகம் தெரிவித்தார். வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டுக் கூட்டம் ஒன்றில் அதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

சென்னை பல்கலைக்கழகத்தில் அல்லது அதன் துணைக் கல்லூரிகளில் கலாநிதிப் பட்டநெறியை கற்க விரும்பும் அகதி மாணவர்களுக்கு தமிழ்நாடு மாநிலத்தின் ஒதுக்கீட்டுக்கொள்கை அடிப்படையில் அவர்களை அனுமதிப்பதற்கு பல்கலைக்கழகம் முன்வந்துள்ளது. அத்தகைய மாணவர்கள் பிரவேசப் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைய வேண்டும் எனினும் இட ஒதுக்கீட்டுக்கொள்கை அடிப்படையிலேயே அனுமதிக்கப்படுவார்கள். அனுமதி நடைமுறைகளுக்கு பதிவாளர் தலைமையிலான நான்கு அங்கத்தினர்கள் கொண்ட குழு ஒன்று பொறுப்பாக இருக்கும். 2010ஆம்ஆண்டுஆரம்பமாகும் கல்வி ஆண்டிலிருந்து இந்த நடைமுறை அமுலுக்கு வரும் என்றும் துணைவேந்தர் திருவாசகம் தெரிவித்தார்.

(ஓ-4)

# படகு மூலம் வெளிநாடு செல்ல முயன்றவர்கள் மட்டக்களப்பில் கடற்படையினரால் கைது

(கொழும்பு)

ட்ரோலர் படகுகளின் மூலம் வெளிநாடு செல்வதற்கு முயற்சித்த சில நபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பிலிருந்து அவுஸ்திரேலியா போன்றதொரு நாட்டிற்கு படகு மூலம் குறித்த நபர்கள் பயணம் செய்ய எத்தனித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


மட்டக்களப்பிலிருந்து சுமார் நாற்பது பேர் அடங்கிய குழுவொன்று இவ்வாறு சட்டவிரோதமான முறையில் வெளிநாடு செல்ல முயற்சி மேற்கொண்டது.

குறித்த நபர்களை மிரியஸ்ஸ பகுதியில் வைத்து கடற்படையினர் கைது செய்ததாகவும் கைது செய்யப்பட்டவர்கள் காலி கடற்படை முகாமிற்கு அழைத்து வரப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சட்டவிரோத பயணிகள் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஓ-4)

# விவாத அரங்கு 1

## ஒரே பாடசாலையில் தொடர்ந்திருந்தால் ஆர்வக் குறைவு ஏற்படும்



எந்தவொரு நிறுவனத்திலோ , அமைப்பிலோ 5 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றுவதும் என்பது தவிர்க்கப்பட வேண்டியது. தொடர்ந்து ஓரிடத்திலே கடமையாற்றுகின்ற பொழுது வேலை மீதான ஈடுபாடு குறைவடைந்து விடுகின்றது. அவர்கள் பழகுகின்ற சூழல் சந்திப்புகள் எல்லாமே ஒரே விதமாக அமைந்து விடுகின்றது.

அங்கே அவர்களின் செல்வாக்கு ஒரு வழியில் மேலோங்குவதுடன் அவர்கள் தங்களின் அதனால் முழுத்திறனை Scniority பிரயோகிக்கவும் முற்படுவர். இச் செயற்பாடு இவர் மீதான மற்றவர்கள் கொண்டுள்ள மரியாதையினையும் கௌரவத்தினையும் குறைவடையச் செய்கின்றது. இது ஆசிரியர்களுக்கும் விதி விலக்கானது அல்ல.

இவ்வகையிலேயே ஏழு வருடங்கள் ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களின் இடமாற்றம் கட்டாயமாக மேற் கொள்ளப்படவேண்டியதே குறித்த ஒரு பாடசாலையில் ஆசிரியர்கள் தொடர்ந்து இருப்பதால் அவர்களுக்கு சொல்வாக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாதது. இதனால் அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ சில சந்தர்ப்பங்களில் தவறான முடிபுகள் தீர்மானங்களுக்கு துணைபோகின்ற செயற்பாடுகளும் இடம் பெற்றுக்கொண்டே இருக்கின்றன.

அத்தோடு சில ஆசிரியர்கள் மிக நீண்ட கடினமான பயணத்தின் மத்தியிலேயே தங்களின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கை களின் ஈடுபடுகின்றனர். இன்னும் சிலரோ மிக அருகாமையிலேயே பயணச் சிரமங்கள் இன்றி கல்விச் சேவையினை வழங்குகின் றன.

எனவே இவ் ஆசிரியர்களின் இடமாற்றம் இதற்கான பரிகாரமாகவும் அமையும் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை.

ஒரே பாடசாலையிலே தொடர்ந்து கடமையாற்றுகின்ற ஆசிரியர்களின் அறிவும் , ஆளுமையும் வேறு பாடசாலைகளுக்குப் பகிரப்படுவது ஆசிரியர்களின் மேம்பாட்டுக்கு மட்டுமன்றி மாணவர்களின் மேம்பாட்டுக்கும் உதவும்.

இது ஆசிரியர்களின் அனுபவ அறிவு விருத்திக்கும் களம் அமைக்கும் ஒரே பாடசாலையில் தொடர்ந்து கடமையாற்றுகின்ற பொழுது அங்கே மேற்பார்வை செய்ய வருகின்ற உயர் அதிகாரிகளுடனான ஆசிரியர்களின் நட்பும் விருத்தியடைவதனால் அவர்களின் தயார்படுத்தல் ஒழுங்கு படுத்தல் மந்தம் அடைகின்றது. இதுவும் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஆரோக்கியமானதல்ல.

எனவே ஏழு வருடங்கள் ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களின் இடம் மாற்றம் நியாயமானதும் அவசியமானதுமாகும். என்பதே என்னுடைய வாதமாகும். மாற்றத்திற்கு விண்ணப்பித்தோர் விண்ணப்பிக்காதோர் என்ற பேதம் இன்றி இன்று பல்வேறு திணைக்களங்களிலும் 5 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு ஜனவரி முதலாம் திகதியில் இருந்து மாற்றம் வந்திருக்கின்றது.

எனவே ஆசிரியர்கள் விடயத்திலும் இதனைக் கைக் கொள்வது மிகவும் பொருத்தமானதே.

பரராஜசிங்கம் –ரமேஸ்
புலோலி மேற்கு.

## மேலாதிக்கத்தை தடுக்க இடமாற்றம் செய்யுங்கள்

ஏழு ,வருடங்கள் ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களின் இடமாற்றம் நியாயமானதும் அவசியமானதுமாகும். ஏனெனில் ஒரே பாடசாலையில் 7 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றும் ஆசிரியர்கள் அந்தப் பாடசாலையினை தமது செல்வாக்கிற்கும் ஆதிக்கத்திற்கும் உட்படுத்துகின்றனர்.

நமது பிள்ளைகளையும் உறவினர்களையும் அந்தப் பாடசாலையிலேயே சேர்ப்பது மட்டுமல்லாது தமிழ்த்தினப்போட்டி ஆங்கிலதினப்போட்டி போன்ற போட்டிகளில் தமது பிள்ளைகளுக்கும் உறவினர்களுக்கும் முதல் இடம்கொடுத்து ஏனைய மாணவர்களின் திறமைகளை மழுங் கடிக்கின்றனர்.




எனவே யாழ். மாவட்ட மாணவர்களின் கல்வியில் நிலை உயர வேண்டுமாயின் ஏழு வருடங்கள் ஒரே பாடசா லையில் கடமையாற்றிய ஆசிரியர்களின் இடமாற்றம் நியாயமானதும் அவசியமான துமாகும்.

க.இதயராஜ்
A/L (2008)

## ஆரோக்கியமான சமூகம் உருவாக ஆசிரியர் இடமாற்றம் கட்டாயம்

கடந்த பல மாதங்களாக ஆசிரியர்களின் இடமாற்றம் குறித்து விவாதங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. விவாதம் என்பது ஒரு கருத்து குறித்து பொதுவான நிலை ஏற்பட முன்னுள்ள முரணாகும். நானும் ஒரு மாணவன் என்ற ரீதியில் என் ஆரம்ப கால பாடசாலை நாட்களை நினைத்துப்பார்க்கிறேன்.

தரம் 1-5 வரை பெரும்பாலும் ஒரே ஒரு ஆசிரியரே கற்பித்தார். இதனால் வெளிப்படையாகவுள்ள நன்மையை நோக்கும் போது ஆசிரியரால் தன் வகுப்பில் உள்ள ஒவ்வொரு மாணவனதும் அறிவு மட்டம் தொடர்பாக அறிந்து செயற்பட இயலும்.



லால் தான் கற்பித்தல் துறையில் அவர்களால் பிரகாசிக்க முடிகிறது.

மாணவனுக் குரிய களங்கள் வேறுபடும் போது அவன் புதிய அனுபவங்களை பெறுவதைப்போல ஆசிரி யர்களுக்கும் இவ்வாறான இடமாற்றங்கள் பற்றிய அவசியம் எழுகின்றன.


இவ்வாறான இடமாற்றங்கள் மூலம் ஆசிரியர் ஒருவர் பல்வேறுபட்ட அனுபவங்களைப்பெறுகிறார். புதிய தலைமைத்துவத்தின் கீழ் பணியாற்றுகிறார், புதிய நண்பர்களை சந்திக்கின்றார். தனது வழமையான பிரதேசத்தில் இருந்து மாறுபட்ட சூழலில் மாணவர்களை எதிர்கொள்கிறார்.

இதனால் எத்தகைய சூழ்நிலைகளிலும் கற்பிக்கின்ற மனோ தைரியத்தை அடைகிறார். மேலும் இந்த மாணவன் திறமைசாலி, அவன் மெல்லக்கற்போன் என்ற முற்கற்பிதங்கள் இன்றி மாணவர்கள் அனைவரும் சம நோக்கில் அவதானிக்கப்படுவர். ஆசிரியர்களது ஆரம்ப காலப்பணி பெரும்பாலும் கஷ்டப்பிரதேசம் ஒன்றில் அமைந்திருக்கும் அங்கிருந்து அவர் பல அனுபவங்களை பெற்றிருப்பார்.

திறமை என்பது ஓரிடத்தில் மட்டும் குவிக்கப்படுவது என்பது ''சமூக ஆரோக்கியத்திற்கு'' ஏற்புடையதல்ல . ஆசிரியர்களின் வினைத் திறன் மாணவர்களின் கல்வி நிலை பற்றி வினாக்கள் தொடுக்கப்படும் காலத்தில் இத்தகைய இடமாற்றங்கள் பாராபட்சமின்றி மேற்கொள்ளப்படும் போது நியாயமானதும் அவசியமானதுமாகும் என்பதை ஆணித்தரமாக கூற முடியும்.

தி. கமலசுதர்சன்
தும்பளை.

## ஒரே பாடசாலையில் தொடர்ந்து கடமையாற்றும் ஆசிரியர்களிடம் சர்வாதிகாரம் ஏற்பட முடியாது



ஆசிரியர் தொழில் வாண்மை மிக்க தொழிலாக மாறி வரும் இன்றைய நிலையில் ஆசிரி யர் இட மாற்றம் என்பது கல்வி உலகின் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்தியே தீரும் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

எனவே ஆசிரியர் இடமாற்றம் என்பது பற்றி ஆராய வேண்டியது அவசியமானதொன்றாகிறது.

ஆசிரியர் இடமாற்றம் என்னும் விடயத்தை பொறுத்தவரையில் அரசியல் செல்வாக்கு நிலைகளை செல்வாக்கு என்பவற்றிற்கு அப்பாற்பட்ட நிலையில் ஏழு வருடங்கள் தொடர்ச்சியாக ஒரே பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு மனச்சோர்வு ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

அவ்வகையில் ஆசிரியரை பொறுத்தவரையில் மாற்றம் ஏற்படுவது அவசியமானதாகும். புதிய சூழல், புதிய மாணவ சமூகம், புதிய நிர்வாக கட்டமைப்பிற்கு முகம் கொடுக்கும் போது ஆசிரியருக்கு அது புது இரத்தம் பாய்வது போல தென் பூட்டுவதாக அமையும்.

ஒரே பாடசாலையில் தொடர்ந்து கற்பிப்பதன் மூலம் ஒரு எதேச்சதிகாரப் போக்கு ஆசிரியர் மனதில் உருவாகுவது தவிர்க்க முடியாததாகிறது.

அது மட்டுமல்ல ஒரே பாடசாலை யில் தொடர்ந்து கற்பிப்பதன் மூலம் ஆசிரியர் மத்தியில் இருந்து முரண்பாடுகள் ஏற்படுவதற்கும் கற்பித்தலில் முழுக் கவன மும் செலுத்த முடியாத நிலையும் தன்னை எவரும் கேள்வி கேட்க முடியாது என்ற எண்ணப்பாங்கும் ஏற்பட வாய்ப்புண்டு.

உள்ளக மேற்பார்வையின் போது நீண்ட காலம் கடமையாற்றும் ஆசிரியரது கற்பித்தல் செயற்பாட்டை மேற்பார்வை செய்ய சக ஆசிரியர் பின்னடிப்பதும், உண்மையான மதிப்பெண்களை சம்பந்தப்பட்ட ஆசிரியருக்கு வழங்க பின்னடிக்கும் நிலையும் காணப்படுவது தவிர்க்க முடியாததாகிறது.

தொடர்ச்சியாக ஒரே பாடசாலையில் கடமையாற்றுவதன் மூலம் அதிபரின் தனிப்பட்ட செல்வாக்கை பெறுவதற்கும் அதன் மூலம் ஏனைய ஆசிரியர்களை அடக்கி ஆள முற்படும் நிலையும் ஏற்படுவதற்கும் வாய்ப்புகள் அதிகம் உண்டு.

அதுமட்டுமன்றி சம்பந்தப்பட்ட ஆசிரியர் இல்லாவிட்டால் பாடசாலையே இல்லை என்று மாணவர்க்கிடையே செல்வாக்கை ஒருவர் பிரயோகிப்பதற்கும் வழிவகுக்கும்.

எனவே முடிவாக நோக்கின் மாணவரின் நலனை மையமாகக் கொண்ட ஆசிரியரின் கற்பித்தல் செயற்பாட்டிற்கு எந்தவித குந்தகமும் ஏற்படுத்தாத இடமாற்றம் நிச்சயமாக ஆசிரியருக்கு தேவை என்பதே எனது ஆணித்தரமான வாதமாகும்.

க.கணேசராசா
ஆசிரியர்
குட்டியப்புலம் அ.த.க. பாடசாலை.

## மூன்றாம் அமர்வு

மேலும் அவனது குடும்பப் பின்னணி பொருளாதார வசதிகள் பற்றிய அறிவால் மாணவனுக்கு ஏற்படும் பிரச்சினைகளை தீர்க்க முடியும்.

ஆனால் 6ஆம் தரத்திற்கு இடை நிலைக்கல்விக்காக மாணவன் வேறு ஒரு பாடசாலைக்கு உள்வாங்கப்படும் போது முற்றிலும் புதிய சூழலை உணர்கின்றான்.

புதிய இடம், புதிய- பல்வேறு இடங்களில் இருந்து வரும் மாணவர்கள், புதிய ஆசிரியர்கள் இதன் காரணமாக மாணவன் பல்வேறுபட்டவர்களுடன் பழகக் கூடிய சூழ்நிலை உண்டாகின்றது.

ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனி ஆசிரியர்கள் என்பதால் உரிய பல அனுபவங்களை பெறுகிறான். தரம் 1இல் இருந்து 5 என்ற ஒரு சிறிய வட்டத்தை விட்டு புதிய உலகை தரிசிக் கின்றான்.

இடை நிலைக் கல்வியை பூர்த்தி செய்து உயர் கல்விக்காக பல்கலைக்கழகம் புகும் போது அடுத்த கட்ட அனுபவ வளர்ச்சியை அடைகிறான். அவனுக்கான களங்கள் விரிவடைகின்றன.

பல்கலைக்கழகக் கல்வி நிறைவில் அவன் சமூகத்திற்குள் உள்வாங்கப்படும் பொழுது நிறைவை நோக்கிய புதிய அனுபவங்களை உணர்கிறான் சமூக ஊடாட்டம் என்பது மிக அவசியம்.

அனுபவமே சிறந்த ஆசான் என்பார்கள் . ஆசிரியர்கள் என்போரும் எப்போதும் கற்றலில் ஈடுபடுகின்ற மாணவர்களே ஆத

# இன்று ஒரு தகவல்

## வாழ்க்கை என்பது...

ஒரு பெரிய பணக்காரருக்கு பிக்காஸோவின் ஓவியம் தேவைப்பட்டது. நேராக பிக்காஸோவிடம் போனார்.

"ஐயா... எனக்கு உடனடியாக இரண்டு ஓவியம் தேவை. எவ்வளவு கேட்டாலும் தரத் தயாராக இருக்கிறேன்'' என்றார்.

"நாம் சொல்லக்கூடிய விலையை இவரால் தர முடியாது என்று நினைத்துக் கொண்டு அதிக விலையைக் கூறினார் பிக்காஸோ. வந்தவர் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளாமல் பையைத்திறந்து பணத்தை எண்ண ஆரம்பித்தார்.

இப்பொழுது பிக்காஸோவின் நிலைமை சிக்கலாகி விட்டது.

ஏனெனில் அவரிடம் அப்பொழுது கைவசம் இருந்தது ஒரே ஒரு ஓவியம் தான். ஆனால் வந்தவர் இரண்டு ஓவியம் கேட்கிறார். பணத்தை வேறு எண்ணிக் கொண்டிருக்கிறார். என்ன செய்வது?

கிடு கிடுவென்று உள்ளே போனார்.

தன்னிடமிருந்த அந்த ஒரே ஒரு ஓவியத்தை இரண்டு பாதியாக வெட்டினார்.

வெளியே எடுத்துக் கொண்டு வந்து, ''இந்தாங்க இரண்டு ஓவியங்கள்'' என்றார்.

"ஆகா... பிரமாதம்!'' என்று சொல்லி அந்த இரண்டையும் அதிக விலை கொடுத்து வாங்கிக் கொண்டு அவர் புறப்பட்டார். இப்படி ஒரு கதை உண்டு.

பிக்காஸோ சம்பந்தமாக இன்னொரு கதையும் சொல்வதுண்டு. அதாவது... அவர் ஒரு ஓவியக் கண்காட்சி வைத்திருந்தார். ஏராளமான மக்கள் அதை வந்து ஆர்வமாக பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''எவ்வளவு அற்புதமான ஓவியங்கள்!'' என்று சொல்லி எல்லோரும் புகழ்ந்து கொண்டிருந்தார்கள்.

குறிப்பாக ஒரு ஓவியத்தைச் சுற்றி ஏகப்பட்ட கூட்டம். ஒரு விமர்சகர்... அந்த ஓவியத்திற்கு என்ன அர்த்தம் என்று மிகவும் பெருமையாக விளக்கம் சொல்லிக் கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் தற்செயலாக பிக்காஸோ அந்தப் பக்கமாக வந்தார். ஓவியத்தைப் பார்த்தார்.

"கொஞ்சம் பொறுங்கள்... யாரோ ஒரு விபரம் தெரியாதவன் இந்த ஓவியத்தை தலைகீழாக தொங்க விட்டிருக்கிறான்'' என்று சொல்லிவிட்டு அதை நேராகத் திருப்பி மாட்டினார். இதுவரைக்கும் விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தவருக்கும் எப்படி இருந்திருக்கும்.

தலைகீழாக இருந்த ஓவியம் பார்ப்பதற்குப் பொருந்தாத மாதிரித் தெரிந்தாலும் ரசிப்பதற்கு அழகாக இருந்திருக்கிறது. எப்பவுமே... பொருந்தாத ஒன்று உங்கள் அறிவிற்கு சவாலாக இருக்கும் என்கிறார் ஓஷோ.

அதனால் தான் ஒவ்வொரு விமர்சகரும் அந்தப் படத்தை தாம் சரியாகப் புரிந்து கொண்டார்கள் என்பதை நிரூபிக்க முயற்சி செய்து கொண்டிருந்தார்கள்.

வாழ்க்கை என்பது ஓவியத்தை விட அழகானது. இது உயிருள்ள ஓவியம். ஓவியத்தில் இருக்கும் ரோஜாப்பூ அசைவதில்லை. செடியில் இருக்கும் ரோஜாப்பூ அசையும்.

நிஜமான ரோஜாப்பூவை ரசிக்கத் தெரிந்தவர்களுக்கு படத்தில் வரையப்பட்டிருக்கும் ரோஜாப்பூ தேவைப்படாது.

ஓஷோ என்ன சொல்கிறார் தெரியுமா?

''உன்னால் ஒரு சூரிய அஸ்தமனத்தை விலைக்கு வாங்க முடியாது. ஆனால் நீ பிக்காஸோ வரைந்த சூரிய அஸ்தமன ஓவியத்தை விலைக்கு வாங்கலாம். ஆனால்... உண்மையான சூரிய அஸ்தமனத்தை அனுபவிக்கத் தெரிந்த ஒருவன் ஒருபோதும் சூரிய அஸ்தமன ஓவியத்தை விலை கொடுத்து வாங்க ஆர்வம் கொள்ள மாட்டான்'' என்கிறார்.

''வாழ்க்கை அந்த அளவுக்கு ஒரு நல்ல ஓவியம் போன்றது. வாழ்க்கை ஒரு அசையும் ஓவியம்! உயிருள்ள ஓவியம்!'' என்கிறார் அவர்.

இருந்தாலும் நம்மைப் போன்றவர்களுக்கு அசலை விட நகல்தான் நன்றாக இருப்பது போல் தோன்றும்.

ஒருவன் ஒரு குரங்கு பொம்மை வாங்குவதற்காகக் கடைக்குப் போனான். விதவிதமான குரங்கு பொம்மைகள்!'

"அதோ அந்த பீரோ மேல் இருக்கிறதே... அது என்ன விலை?'' என்றான்.

"என்ன விலை கொடுத்தாலும் அதை விற்கமுடியாது'' என்றார் கடைக்காரர்.

"ஏன்?'' என்று கேட்டான் இவன்.

''அது பொம்மை இல்லை. என்னுடைய கடைக் குட்டிப் பையன்'' என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தம்மிடம் கற்கும் ஒவ்வொரு பிள்ளையையும் தம்பிள்ளை போல் கவனிக்கும் ஆசிரியர்கள் சிலரே

## பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க

(கொழும்பு)

ஆசிரியர்கள் பொறுப்புடன் செயற்பட்டால் பரீட்சைகளில் அதி திறமையை மாணவர்கள் வெளிப்படுத்துவர்.

ஆசிரியர்கள் தம்மிடம் கற்கும் ஒவ்வொரு பிள்ளையையும் தமது பிள்ளை போலப் பார்த்த காலமிருந்தது.

அவ்வாறான ஆசிரியர்கள் சிலரே இன்று இருக்கின்றனர் என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள், தனியார் வகுப்புகளுக்குக் கூடுதலான முக்கியத்துவத்தைக் கொடுத்து வருகின்றனர். இது மாணவர் சமுதாயத்திற்கு மட்டுமல்லாது, முழு நாட்டிற்கும் செய்கின்ற அநியாயமாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் களுத்துறை மாவட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு கணனி இயந்திரங்களை வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் விசேட திறமைகளைப் பெற்றுக் கொண்ட களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த 14 மாணவர்களுக்குக் கணனியும் தலா 5 ஆயிரம் ரூபாவும், மாவட்டத்தில் அதி கூடிய புள்ளியைப் பெற்ற மாணவிக்கு 20 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டன.

இவ் வைபவத்தில் பிரதமர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தனியார் வகுப்புகளுக்கு ஓடுகின்ற ஆசிரியர்கள் இருக்கின்ற யுகத்தில் தமது சேவையில் பொறுப்பாக இருந்து பல திறமைகளைக் காட்டுகின்ற ஆசிரியர்களும் இருக்கின்றனர்.

அவ்வாறான ஆசிரியர்களின் சேவைகளைப் பாராட்ட வேண்டும்.

பாடப் புத்தகங்களின் மூலம் பெற்றுக் கொள்கின்ற அறிவு மட்டும் எமது பிள்ளைகளுக்குப் போதாது.



பிள்ளைகள் தர்மம் தொடர்பில் அறிந்திருக்க வேண்டும். அதனூடாகச் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ள முடியும்.

அத்துடன் புதிய தொழில் நுட்பத்தை இளைய தலைமுறையினருக்குப் பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும்.

அதன் மூலமாகவே பிள்ளைகள், தமது எதிர்கால உலகத்தை வென்றெடுத்துக் கொள்வர். நாமும் அவர்களுக்குப் பின்னால் நிற்க முடியும் என்றார்.

(ஓ-4)

## வலயமட்ட ஆசிரியர்களுக்கான இடமாற்ற சபைக்கூட்டம்

(அல்வாய்)

வடமராட்சி வலயத்திற்குட்பட்ட ஆசிரியர்களின் இடமாற்றத்தை ஆராய்ந்து இடமாற்றங்களை வழங்குவது தொடர்பான இடமாற்ற சபைக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வடமராட்சி வலயக்கல்வி பணிப்பாளரின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தவறாது இக் கூட்டத்திற்கு சமூகமளிக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா கேட்டுள்ளார். (ஓ-9-19)

## பகிடிவதையால் பாதிக்கப்பட்ட மாணவனை மீண்டும் தாக்கிய மாணவனுக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்டு பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவனை மீண்டும் பகிடி வதைக்கு உட்படுத்தியதாக சிரேஷ்ட மாணவன் ஒருவரை எதிர்வரும் வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி மஜிஸ்திரேட் நீதிவான் சுமுது பிரேம்மசந்திர உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சில வாரங்களுக்கு முன்னர் பேராதனை பல்கலைக்கழக கலைப் பீடத்தின் புதிய மாணவன் ஒருவன் மிக மோசமான வகையில் பகிடி வதைக்குள்ளாக்கப்பட்டமை தொடர்பாக 14 சிரேஷ்ட மாணவர்கள் பேராதனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் மூலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் கடுமையாக எச்சரிக்கப்பட்ட நிலையில் நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஏற்கனவே பகிடிவதையில் பாதிக்கப்பட்ட மாணவன் தான் பல்கலைக்கழக உணவகத்தில் இருந்த போது கலைப் பீடத்தின் மூன்றாவது ஆண்டு சிரேஷ்ட மாணவன் ஒருவன் தனது கன்னத்தில் அறைந்து தாக்கியதாக பேராதனை பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் குறிப்பிட்ட மாணவனை சந்தேகத்தின் பேரில் கைது செய்து கண்டி நீதிமன்றத்தில் ஆஜர் செய்து நீதிவானின் உத்தரவுக்கமைய எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைத்துள்ளனர். (ஓ-4)

## இராசி பலன்

*25.11.2009*
*(கார்த்திகை 09 புதன்கிழமை)*
*அட்டமி பிற்பகல் 1.39 மணிவரை*
*சதயம் முன்னிரவு 11.38 மணிவரை*
*இராகுகாலம் 12.12 - 1.42 மணிவரை*
*சுபநேரம் 4.42-6.12 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, உறவினர் சந்திப்பு, பெருமையடைதல். |
| இடபம் | நண்பர்கள் உதவி, அதிகாரம், முயற்சி கைகூடும், போசன சுகம். |
| மிதுனம் | ஆன்றோர் சந்திப்பு, கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு, தொழில் நன்மை. |
| கடகம் | முயற்சி தாமதம், பணக்குறைவு, பிறருக்கு உதவுதல், வீண் பகை. |
| சிங்கம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, பொருள் சேர்க்கை, ஆரோக்கிய நிலை, கலந்துரையாடல். |
| கன்னி | தொழில் நன்மை, சுவாரஸ்யம், எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை. |
| துலாம் | வியாபார விருத்தி, புத்திரரால் கவலை, எடுத்த காரியம் தாமதமாகும், சிறுவியாதி. |
| விருச்சிகம் | கல்வியில் ஆர்வம், உறவினர் சந்திப்பு, நல்ல முயற்சி, உஷ்ண ரோகம். |
| தனுசு | கூட்டுமுயற்சி, வாக்கு மேன்மை, தனலாபம், வாகன சுகம். |
| மகரம் | பெரியோர் உதவி, தனவிரயம், முயற்சி தாமதம், எதிர்பாராத நன்மை. |
| கும்பம் | உறவினர் வருகை, புதிய திருப்பம், போசன சுகம், தொழில் சிந்தை. |
| மீனம் | காரிய அலைச்சல், சயன சுகக் குறைவு, ரோகநிலை, போசன சுகம். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100-110 | 100-160 | 130 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 100 | 130 | 75 |
| தக்காளி | 60 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 50 |
| கோவா | 100 | 120 | 120 |
| கரட் | 80 | 100 | 80 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 60 | 80 | 35 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 90 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 120 |
| பாகற்காய் | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 40 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 80 | 100 | 70 |
| லீக்ஸ் | 120 | 140 | 160 |
| பீற்றூட் | 60 | 80 | 70 |
| கறிமிளகாய் | 90 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 60 | 80 | 130 |
| கீரை - 1 பிடி | 30 | 40 | 20 |
| தேசிக்காய் | 180 | 220 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 | 30 |

# மேல்மாகாண கல்வித் திணைக்களம்
# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை - 2009
# பயிற்சி வினாத்தாள் - வரலாறு

## பகுதி-I

1 மணித்தியாலம்

கவனிக்க,

i. சகல வினாக்களுக்கும் விடை தருக.

ii. இலக்கம் 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள (01), (02), (03), (04) என்னும் விடைகளுள் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

iii. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளின் வட்டங்களில் விடைக்குரிய வட்டத்தினுள் (X) புள்ளடி இடுக.

iv. அவ்விடைத்தாளின் பின்னால் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை வாசித்து அதன்படி செயற்படுக.

(01) வரலாறு என்பது ஒரு பாடமல்ல, பல பாடங்களை உள்ளடக்கியது, இவ்வாறு கூறியவர்.
1- ஈஎச்காரி 2- பேராசிரியர் ஈனியாரி
3- ஜீ.எம்.ட்ரெவ்லியன் 3- சிறி ஜவர்கால் நேரு.

✶ A தொடக்கம் F வரையான எழுத்துக்களால் பழைய கல்வெட்டுகள் சில குறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்களின் துணையுடன் 02 தொடக்கம் 05 வரையான வினாக்களுக்கு விடை தருக.

A கல்விகாரை கல்வெட்டு
B பரம்பரஸ்தலாவ கல்வெட்டு
C தோணிகல் கல்வெட்டு
D சங்கமு கல்விகாரை கல்வெட்டு.
E பதுள்ள தூண்கல்வெட்டு.
F கற்புத்தகம் கல்வெட்டு.

(02) கலிங்க வம்சத்தவரின் அரச உரிமை பற்றி குறிப்பிடும் கல்வெட்டை குறிக்கும் எழுத்து.
1- A 2- D 3- B 4- F

(03) நீர்வள நாகரிகத்தின் போது தேசிய வர்த்தகம் தொடர்பான வர்த்தக சங்கம், வர்த்தக சபை இருந்தமையைக் குறிப்பிடும் கல்வெட்டுச்சோடி.
1- A யும் B யும் 2- E யும் B யும்
3- C யும் E யும் 3- B யும் C யும்.

(04) பிடதகஸ, மதெஹச, அகலஹச என்று இலங்கையில் மூன்று போகங்களில் நெல் பயிரிட்டமை பற்றி கூறும் கல்வெட்டு.
1- C 2- B 3- E 4- D

(05) 02 ஆம் கஜபாகு மன்னனின் பின்னர் பராக்கிரம இளவரசனுக்கு இராசரட்டை சிம்மமாசனம் கிடைப்பதற்கென கைச்சாத்திட்ட உடன்படிக்கையைக் கொண்ட கல்வெட்டு?
1- A 2- F 3- D 4- C

(06) இந்தியாவின் பதினாறு பெரும் குடியிருப்புக்களுள் சமூக இராச்சியத்தையும் ஆட்சியையும் ஒழுங்கு வரிசையில் கொண்ட விடையைத் தெரிக?
1- கோசல, மகதம் 2- வஜ்ஜி, மல்லம்.
3- மகதம், வஜ்ஜி 4- மல்லம், கோசல

(07) இந்தியாவின் வடமேற்குப் பகுதியை வெளிநாட்டினரின் ஆதிக்கத்திலிருந்து மீட்பதற்காக செலியூகஸ் நிகேட்டருடன் போரிட்டு வெற்றி பெற்ற மன்னன்?
1- பிந்துசார மன்னன் 2- அசோக மன்னன்
3- சந்திரகுப்த மௌரிய மன்னன்
4- முதலாம் சந்திரகுப்த மன்னன்

(08) ஆரியர்கால இந்தியாவில் காணப்பட்ட சபை, சங்கம் என்பவற்றிலிருந்து தெளிவாவது?
1- அரசின் பலத்தைவிட பலம்வாய்ந்த சங்கங்கள் இருந்தமை.
2- ஒற்றுமையுடன் செயற்பட்டு தேவைகளை நிறைவேற்றிக் கொண்டமை.
3- ஆரியருடன் போரிடுவதற்காக ஒன்று திரண்டமை.
4- ஆட்சியின் இலகுவுக்காக சபைகளை ஏற்படுத்தியமை.

✶ கீழ்வரும் வரலாற்று நிகழ்வுகளைக் கொண்டு 09ஆம், 10ஆம் வினாக்களுக்கு விடை தருக.
A- சத்திரிய பட்டாபிஷேக முறையை ஆரம்பித்தமை.
B- மகாஜான பௌத்த பிரசாரத்துக்காக உதவியமை.
C- திசாவாவியை நிர்மாணித்தமை.
D- கிரிதலே வாவியை நிர்மாணித்தமை.
E- மேகவர்ணமய மந்திரி தலைமை வகித்த கலகத்தை பேச்சுவார்த்தையின் மூலம் தீர்த்தமை.

(09) இவற்றுள் மகாசேன அரசன் கால வரலாற்று நிகழ்வு?
1- A யும் C யும் 2- B யும் E யும்
3- C யும் E யும் 4- D யும் E யும்

(10) இவற்றுள் தேவனம்பியதிஸ்ஸ மன்னன் கால நிகழ்வு?
1- A யும் B யும் 2- A யும் C யும்
3- A யும் D யும் 4- D யும் E யும்

(11) நிரல் "அ" விலுள்ள அரசருடன் "ஆ" நிரலிலுள்ள நிகழ்வுகளைப் பொருத்தினால் வரும் சரியான நிகழ்ச்சிகளின் ஒழுங்கு?

| "அ" | "ஆ" |
|---|---|
| i. மகாபராக்கிரமபாகு மன்னன் | - A படையெடுப்புகளுக்கு முகங்கொடுப்பதற்காக கலிங்க பாண்டவ நாடுகளுடன் தொடர்பு கொண்டமை. |
| ii. முதலாம் விஜயபாகு மன்னன் | - B கலிங்க மாகனின் படையெடுப்புக்கு முகங்கொடுத்தல். |
| iii. நிஸ்ஸங்கமல்ல மன்னன் | - C சுகலாதேவியிடமிருந்து தந்ததாதுவைப் பெற்றுக் கொண்டமை. |
| iv. பராக்கிரம நநேந்திர மன்னன் | - D நியாயமான வரிக் கொள்கை நடைமுறைப் படுத்தியமை. |
| | E இரண்டாம் பராந்தகனின் படையெடுப்புக்கு முகங் கொடுத்தமை. |

1- DABC 2- CABE 3-EADB 4- CADB

✶ கீழே சோடியாகக் கருத்துக்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு சோடியிலும் முதலாவது, இரண்டாவதில் ஏற்படுத்தும் தாக்கத்தினை கருத்தில் கொண்டு 12 தொடக்கம் 14 வரையான வினாக்களுக்கு விடை தருக.

| | |
|---|---|
| A ஜோர்ஜ் ஸ்டீவன்சன் | - பொருள் போக்குவரத்தை விரிவாக்கியமை. |
| B ஐரோப்பிய குடியேற்றத்திட்டம் | - பேரரசு |
| C அரச தலையிடாக் கொள்கை | - அதிகமானவருக்கு பயன் கிடைக்கும் உற்பத்தி சேவைமுறை. |
| D மாட்டின் லூதர் | - கத்தோலிக்க மதம். |

(12) முதலாவதினால் இரண்டாவது பிரச்சினைக்குள்ளானது.
1- A 2- B 3- C 4- D

(13) முதலாவது காரணமாக இரண்டாவது ஏற்பட்டது.
1- B 2- C 3- D 4- A

(14) முதலாவது காரணமாக இரண்டாவதின் நடவடிக்கை இலகுவானது.
1- C 2- B 3- A 4- D

(15) "அ" நிரலின் தகவலுக்கு "ஆ" நிரலின் தகவலைச் சிரயாகப் பொருத்தினால் வரும் ஒழுங்கைத் தெரிவு செய்க.

| "ஆ" | "அ" |
|---|---|
| i. அரசு என்பது நானே | - A மெடனிக் |
| ii. அரசியல் கைதிகள் | - B மனித உரிமை பற்றிய விசேட பிரகடனம். |
| iii. கால்ஸ்பாட் பிரகடனம் | - C கரிபால்டி |
| iv. மனிதர் அனைவரும் சமம் | - D 14ஆம் லூயி |
| | - E பஸ்டில். |

1- DBAE 2- CDAB 3- EDAB 4- DEAB

(16) இந்தியாவின் சுதந்திரத்திற்காக தேசிய ஒற்றுமை அவசியம் எனக் கூறி இந்திய தேசிய ஒற்றுமையை ஆரம்பித்தவர்?
1- சுரேந்திர நாத் பானர்ஜி
2- பிஜின் சந்திரபோஸ்
3- ஒக்டேவியன் ஹியூம்
4- தாதாபாய் நவரோஜி

(17) இந்தியாவின் சுதந்திரத்திற்காக மகாத்மாகாந்தியால் ஆரம்பிக்கப்பட்ட பல்வேறு பேராட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றுள் பொருத்தமற்ற விடை எது?
1- சத்தியாக்கிரகப் பேராட்டம்
2- சுய இராஜ்ஜியக் கட்சி ஏற்படுத்தியமை
3- ஒத்துழையாமை போராட்டம்
4- இந்தியாவை விட்டு வெளியேறு போராட்டம்

(18) "அ" நிரலின் தகவல் "ஆ" நிரலுடன் பொருத்தினால் வரும் சரியான விடை வரும் ஒழுங்கைத் தெரிவு எசய்க?

| "அ" | "ஆ" |
|---|---|
| i. முட்சிஹிதோ | A தீவிரப் போக்கு |
| ii. சியெங் காய்செக் | B நீண்ட பாதயாத்திரை |
| iii. சங் - யாத்சென் | C மெஜிஜி மறுசீரமைப்பு |
| iv. மாவோ சேதுங் | D கோமின்டாங் கொள்கை |
| | E பாலிஸ் சர்வாதிகாரக் கொள்கை |

1- CEDA 2- CEDB 3- EDAB 4- CDEB

(19) போர்த்துக்கேயர் கண்டி இராசதானியை கைப்பற்றுவதற்காக மேற்கொண்ட ஒரு உபாயமாகக் கருதக்கூடியது?
1- கண்டிப் பிரதானிகளின் உதவியைப் பெற்றுக்கொண்டமை.
2- குசுமாசன தேவியைத் தமது பாதுகாப்பில் அரசியாக்கியமை.
3- கத்தோலிக்க மத பிரசாரத்துக்கு உதவி வழங்கியமை.
4- தர்மபால மன்னனிடமிருந்து கொடை உறுதியின் மூலம் சட்டபூர்வமான உரிமையை உறுதி செய்தமை.

(20) கீழேயுள்ள நிகழ்வுகளின் வரலாற்று ரீதியான ஒழுங்குவரிசையைக் கொண்ட விடை எது?
A 2ஆம் இராஜசிங்க மன்னனுக்கும் வெஸ்டர் போல்ட் ஆளுனருக்குமிடையில் உடன்படிக்கை ஏற்பட்டமை.
B 1ஆம் விமலதர்மசூரியன் அரசனானமை.
C கோல்புறூக் சீர்திருத்தத்தின் கீழ் இராசகாரிய முறை ஒழிக்கப்பட்டமை.
D "மியூரன்" கமிஷன் நியமிக்கப்பட்டமை.
E ஸ்ரீவீரபராக்கிரம நரேந்திர சிங்கன் கண்டி மன்னனானமை.
1- ABEDC 2- BDEAC 3- BAEDC 4- EDBCA

(21) "அ" நிரலையும் "ஆ" நிரலையும் சரியாகப் பொருத்தினால் வரும் ஒழுங்கைத் தெரிவு செய்க.

| "அ" | "ஆ" |
|---|---|
| i. விலியம் ஹாவே | A நாடுகாண் பயணம் |
| ii. நிக்கலஸ் கொபர்னிகஸ் | B அச்சுக்கலை |
| iii. வாஸ்கொடகாமா | C சித்திரக்கலை |
| iv. ஜோன் உட்டன் பேர்க் | D மருத்துவ விஞ்ஞானம் |
| | E சூரிய குடும்பம். |

1- DEAB 2- BCDE 3- EDAB 4- DCAB

(22) கொன்ஸ்தந்திநோபிள் நகரம் துருக்கியர் கைவசப்பட்டதும், கிழக்கு நோக்கிய புதுப் பாதையைத் தேடுவதற்கு ஐரோப்பியர் முற்பட்டமைக்கான முக்கிய காரணி.
1- குடியேற்ற நாடுகளை வைத்திருப்பதன் மூலம் ஐரோப்பிய நாடுகளை பணக்கார நாடுகளாக மாற்றுவதற்காகும்.
2- சமுத்திர நீரோட்ட உதவியுடன் பாய்க்கப்பல் மூலம் கடலைக் கடப்பது இலகுவாக இருந்தமையாகும்.
3- கிழக்கிலிருந்து பெறப்பட்ட வியாபாரப் பொருட்கள் அத்தியாவசியப் பொருட்களாக இருந்தமையாகும்.
4- கடற் பாதைகளைத் தேடுவதற்கு அரச ஆதரவு கிடைத் தமையாகும்.

(23) மத்திய கால ஐரோப்பாவில் காணப்பட்ட மானியமுறையின் தன்மைகளல்லாதது.
1- விவசாயப் பொருள்களை அடிப்படையாகக் கொண்ட சமூகம் அமைந்திருந்தமை.
2- வர்த்தக வளர்ச்சி காரணமாக பணப் பயன்பாடு அதிகரிந் திருந்தமை.
3- மானியமுறை சமுதாய முறையில் கீழ்மட்டத்திலுள்ளோர் அடிமைகளாக இருந்தமை.
4- பண்டமாற்று முறைமை நிலவியமை.

(24)
- இராசகாரிய முறையை மீண்டும் ஏற்படுத்தியமை.
- நிர்வாக அதிகாரிகளுக்கு சிங்கள, தமிழ் மொழிகளில் புலமை பெறுவதற்கு தூண்டியமை.
- கி.பி. 1810 இல் குற்றவியல் வழக்குகளை தீர்ப்பதற்காக ஜுரிசபை முறையைக் கொண்டுவந்தமை.

மேலேயுள்ள கூற்றுக்களுடன் பொருந்தும் ஆங்கில ஆளுனர்?
1- சேர் பிரட்ரிக் நோர்த்
2- சேர் தோமஸ் மெயிட்லண்ட்
3- ரொபட் பிரெளன்ரிக்
4- சேர் எட்வட் பாண்ஸ்

(25) மத்தியதரைக் கடலைச் சுற்றிய நாடுகளுக்கும் கிழக்கு நாடுகளுக்குமிடையில் வர்த்தகம் ஆரம்பமானது
1- நாடுகாண் பயணங்களின் பின்னராகும்.
2- மத்திய காலத்திற்கும் முன்னராகும்.
3- விஞ்ஞான மறுமலர்ச்சியின் பின்னராகும்.
4- மத்திய காலத்தின் முடிவின் போதாகும்.

(26) 1948 இன் பெல்பர் அறிக்கையின்படி உலகெங்கும் பரந்து வாழ்ந்த யூதரை ஒன்று சேர்த்து ஏற்படுத்தப்பட்ட இராச்சியம்.
1- இஸ்ரவேல் 2- ஆப்கானிஸ்தான்
3- பலஸ்தீனம் 4- ஈராக்

(27) தென் இந்தியாவில் விஜயநகர சாம்ராஜ்யம் நிலவிய போது வடக்கில் ஆட்சிசெய்த டில்லி சுல்தானின் அரசவம்சம்?
1- செய்யது அரசவம்சம் 2- லோத் அரசவம்சம்
3- மொகலாய அரசவம்சம் 4- பல்பி அரசவம்சம்

(28) A சட்டவாக்கக் கழகம், சட்ட நிர்வாக சபை ஏற்படுத்தப்பட்டமை.
B பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம்.
C நிர்வாக சபை முறை.
D குறைந்தளவு பொறுப்பையுடைய ஆட்சிமுறை.
E நிர்வாக சேவையை சீர்திருத்தியமை.

இவற்றுள் கோல்புறூக் சிபார்சு அடங்கிய விடையைத் தெரிக?
1- C யும் E யும் 2- A யும் C யும்
3- B யும் D யும் 4- A யும் E யும்

(29) முஸ்லீம் ஏகாதிபத்தியத்தின் தலைநகர் டில்லியிலிருந்து தேவகிரிக்கு மாற்றப்பட்டமையே டில்லி சுல்தான் இராச்சியத்தின் வீழ்ச்சிக்குக் காரணமென்பர். அவ்வாறு தலைநகரை மாற்றிய அரசன்?
1- அலாவுதீன் கில்ஜி 2- மொகமட் பின் துக்ளக்
3- பிரோஸ் ஷா 4- இப்ராஹிம் லோதி

(30) பெருந்தோட்ட உற்பத்தியாளரின் வேண்டுகோளின்படி இலங்கையில் புகையிரதப் பாதை அமைப்பதில் ஆரம்பகர்த்தாவாக இருந்த ஆளுனர்?
1- ஹேர்கியூலிஸ் ரொபின்சன் 2- எட்வட் பாண்ஸ்
3- ஹென்றி வோட் 4- வில்லியம் கிரகரி.

(31) இலங்கையின் கல்வித்துறையில் முதன் முதலாக மிஷினரி சங்கங்களின் தலையீடு ஏற்பட்டபோது இலங்கையிலிருந்த ஆளுனர்?
1- பிரெட்ரிக் நோர்த் 2- ரொபட் பிரென்ரிக்
3- மெக்கன்ஸி 4- மோர்கன்

- இலக்கம் 32 தொடக்கம் 35 வரையான வினாக்களில் உண்மையானதும், பொய்யானதுமான சோடிக்கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றிற்குப் பொருத்தமான விடைச் சோடியின் எண்ணைத் தெரிவு செய்க?

| முதல் கூற்று i | இரண்டாம் கூற்று ii |
|---|---|
| 1- பொய் | உண்மை |
| 2- உண்மை | உண்மை |
| 3- பொய் | பொய் |
| 4- உண்மை | பொய் |

(32) i கோல்புறூக் சீர்திருத்தசபை அமைந்தமை
ii மெக்கலம் ஆளுனரின் சீர்திருத்தத்தின்படி கல்விகற்ற இலங்கையருக்கான பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டமை.
1- 1 2- 2 3- 3 4- 4

(33) i. இரத்மலான ஸ்ரீதம்மாலோக்க பிரதம பிக்குவினால் 1873 இல் மாளிகாகந்தையில் வித்தியோதய பிரிவேனா ஆரம்பித்தமை
ii. கி.பி. 1822 இல் ஜோர்ஸ்பேட் என்பவர் கம்பளை சிங்கபிட்டியவில் கோப்பித்தோட்டம் அமைத்தல்.
1- 1 2- 2 3- 3 4- 4

(34) i. தாந்தே, பெட்ராக், பொகாசியோ என்பவர்கள் இங்கிலாந்தில் வாழ்ந்த ஆக்கத்திறன் மிக்கவர்கள்.
ii. மத்தியகாலத்தில் மனிதன் மிக உன்னதமானவனாகக் கருதப்பட்டான்.
1- 1 2- 2 3- 3 4- 4

(35) i கி.பி. 1739 இல் ஸ்ரீவிஜய இராஜசிங்கன் அரசனானான்.
ii. ஒல்லாந்த ஆளுனர் ரைலொக் பனஹுன்ஸ் இரண்டாம் இராஜசிங்கனுடன் சமாதானமாக இருந்தான்.
1- 1 2- 2 3- 3 4- 4

(36) உலக சமாதானத்தைக் காப்பதற்காக இன்று முக்கியமாக கைக்கொள்ள வேண்டிய நடவடிக்கை.
1- அணிசேராக் கொள்கையை கடைப்பிடித்தல்.
2- பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணுதல்.
3- ஐக்கிய நாடுகள் சபைமூலம் தீர்வு காணுதல்.
4- வெளிநாட்டு உதவி மூலம் யுத்த பலத்தை அதிகரித்தல்.

(37) குடாபொல பிக்கு, கொங்காலேகொட பண்டா, வீரபுரன் அப்பு போன்ற தேசியத் தலைவர்களின் தலைமையில் எதிர்ப்புப் போராட்டம் ஏற்படாமைக்கு பிரதான காரணம்.
1- இராஜகாரிய முறையை நீக்கியமை.
2- நீதித்துறை சீர்திருத்தம் ஏற்பட்டமை.
3- மக்கள் மீது மிகமோசமான வரி விதித்தமை.
4- அரச நிர்வாகிகளின் மந்த போக்கு.


(38) இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பிரதிபலன் அல்லாத காரணியைத் தெரிக.
1- பிரான்ஸ், இத்தாலி,ஜேர்மனி போன்ற நாடுகளின் பல நகரங்கள் அழிக்கப்பட்டமை.
2- மொசப்பத்தேமியா ஈராக் எனவும், கொள்ஸ்தாந்திநோபிள் இஸ்தானபுல் எனவும் மாறியமை.
3- ஜேர்மனி கிழக்கு, மேற்காகப் பிரிந்தமை.
4- ஐக்கிய அமெரிக்காவும் சோவித் ரஷ்யாவும் பெரும் வல்லரசாக மாறியமை.

(39) ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது செயலாளர் நாயகத்தினதும் தற்போதைய செயலாளர் நாயகத்தினதும் பெயர்களை ஒழுங்குவரிசைப்படி கொண்ட விடை எது?
1- ஊதாண்ட், டக்ஹமாஸல்
2- ட்ரிக்வலி, புருதோஸ் புருதோஸ் காலி
3- டக்ஹமாஸல், பான்கீமூன்
4- ட்ரிக்வலி, பான்கீமூன்.

(40) அடிப்படை மனித உரிமை மீறல், நிர்வாக சீர்கேடு, முறையற்ற ஆட்சியின் மூலம் மக்கள் எதிர்நோக்கும் பாதிப்புகளுக்கு நிவாரணம் வழங்கும் நோக்குடன் 1978 ஆம் ஆண்டின் அரசியல் திட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட பதவியானது.
1- கணக்காய்வாளர் நாயகம்.
2- பாராளுமன்ற ஆணையாளர்.
3- தேர்தல் ஆணையாளர்.
4- சட்டமா அதிபர்.

## மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகளுக்காக

# பாராளுமன்ற ஆலோசனைக்குழு மிகவிரைவில் அகதி முகாம்களுக்கு விஜயம்



### அமைச்சர் ரிஷாட் பதியுதீன்

(கொழும்பு)

மீள் குடியேற்ற ஆலோசனைக் குழுவில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள முகாம்களுக்கு மிக விரைவில் அழைத்துச் செல்லப்படவுள்ளதாக மீள் குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

இது தொடர்பான பூர்வாங்க ஏற்பாடுகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அமைச்சர், சம்பந்தப்பட்ட ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இது தொடர்பில் சில தினங்களுக்குள் தெரியப்படுத்தப்படும் என்றும் கூறினார். இந்த ஏற்பாடு தொடர்பாக அமைச்சர் ரிஷாட் பதியுதீன் மேலும் தகவல் தருகையில் வடக்கில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களை இயலுமானவரையிலும் மிகத் துரிதமாக மீள் குடியேற்றும் பணிகளை அரசாங்கம் மேற் கொண்டு வருகின்றது.

கடந்த ஒரு வார காலப்பகுதியில் மாத்திரம் 6833 பேர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். இம்மக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

மீதமிருக்கின்ற ஒரு இலட்சத்து 40 ஆயிரத்துக்கும் குறைவான மக்கள் கூடிய விரைவில் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படுவார்கள்.

அரசாங்கம் முகாம்களில் வாழுகின்ற மக்களுக்காகவும் மீள் குடியேறும் மக்களுக்காகவும் போதுமான வசதிகளை செய்யத் தவறியுள்ளதாக சிலர் விமர்சித்து வந்தனர்.

இந்நிலையில் இந்தியாவிலிருந்து வந்த தமிழக எம்.பி.க்கள் குழுவும், ஐ.நா.வின் மனிதாபிமானப் பணிகளுக்கான உதவிச் செயலாளர் ஜோன் ஹோம்சும் அகதி மக்களுக்கான வசதிகளை வரவேற்றுள்ளனர்.

அது மாத்திரமன்றி தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அகதி முகாம் மக்களைச் சந்திக்கும் வாய்ப்பை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்தது.

முகாமுக்கு விஜயம் செய்துவிட்டுத் திரும்பிய தமிழ் எம்.பி.க்கள் அங்கு அரசாங்கம் செய்து கொடுத்துள்ள வசதிகள் குறித்து திருப்தி தெரிவித்ததுடன் பெருந்தொகையான மக்கள் வாழ்கின்ற அகதி முகாம்களில் மிகையானளவு வசதிகளை எதிர்பார்க்க முடியாதெனவும் தெரிவித்திருந்தமை முக்கியமானதாகும்.

இந்நிலையிலேயே மீள் குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகளுக்கான பாராளுமன்ற ஆலோசனைக்குழு மிக விரைவில் அகதி முகாம்களுக்கு விஜயம் செய்யவுள்ளது.

இக்குழுவில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த 32 பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். முகாம்களுக்கு செல்லும் குழு அங்குள்ள நிலைமைகள் தொடர்பில் ஆராயவுள்ளது என்றார். (ஓ-4)

## இலங்கைக்கான புதிய உயர்ஸ்தானிகராக அஷோக் கே.காந் நியமனம்

இலங்கைக்கான புதிய இந்திய உயர்ஸ்தானிகராக நியமனம் பெற்றுள்ள அஷோக் கே. காந்த் தமது நியமனக் கடிதத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேற்று முன்தினம் காலை கையளித்தார்.

இதுசம்பந்தமாக இந்திய உயர் ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில்,

இந்திய வெளிநாட்டுச் சேவையின் சிரேஷ்ட உறுப்பினர் காந்த், இதற்கு முன்னர் 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் இதுவரை மலேசியாவுக்கான இந்திய உயர்ஸ்தானிகராகப் பணியாற்றினார். முன்னர் ஹொங்கொங்கில் இந்திய கொன்சியூலராகவும் இவர் சேவையாற்றினார்.

நேபாளம், சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளிலும் இந்திய ராஜதந்திர அலுவலகங்களில் இவர் முக்கிய பதவிகளை வகித்துள்ளதுடன் புதுடில்லியில் வெளிவிவகார அமைச்சு அலுவலகத்திலும் சேவையாற்றியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-4)

## புலிகளின் கொள்கை பரப்புதலில்

# உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஆதரவாளர் தீவிரம்

# யுத்தவீரர் சரத் பொன்சேகாவும் அவர்களின் வலையில்

### ஓமல்பே தேரர்

(கொழும்பு)

தமிழீழப் புலிகளின் ஆயுதப் படைப் பலம் அழித்தொழிக்கப்பட்டுள்ள போதும் அதன் கொள்கைகளைப் பரப்புவதிலும் செயற்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ள புலிப் பிரதிநிதிகளின் செயற்பாடுகள் இன்னும் ஓயவில்லை.

இதற்கென உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் புலி ஆதரவாளர்கள் திட்டமிட்ட அடிப்படையில் மிகத் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர் என்று வளவ மிட்டியாவத்த ஊடகவியலாளர் சங்கத்தின் ஆலோசகர் கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

கொடக்க வெல பாம்லேண்ட் ஹோட்டல் உற்சவ மண்டபத்தில் நடைபெற்ற வளவமிட்டியாவத்த ஊடகவியலாளர் சங்கத்தின் மாபெரும் செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

விடுதலைப் புலிகளின் உள்நாட்டு பிரதிநிதிகள் இன்று வெற்றிகரமாக செயற்பட்டு வருகின்றமையை நாம் அவதானிக்க முடியும். உதாரணமாக எமது முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் அண்மைக்கால செயற்பாடுகளைக் கூறலாம். யுத்தம் முடிவுக்கு வந்து மூன்று மாதம் முடிவதற்குள் யுத்த முனையில் வீரர்களைப் பயன்படுத்தியே புலிக் கொள்கைகள் அதன் பிரதிநிதிகளால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையை நாம் காண்கின்றோம். இது சர்வதேச சதியின் ஓர் அங்கம் என்பதனை நினைவுப்படுத்த விரும்புகின்றேன்.

சரத் பொன்சேகா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த தலைமை இராணுவ வீரர் மிகச் சிறந்த வீரர் அதில் எவ்வித சந்தேகமும் இல்லை ஆனால் இந்த மாபெரும் யுத்த வீரர் இன்று புலிப் பிரதிநிதிகளின் வலையில் சிக்கியுள்ளார் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

சரத் பொன்சேகாவின் இன்றைய நிலைப்பாட்டிற்கு ஊடகங்களும் காரணமாகும் என்றார். (ஓ-4)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### நீர்முள்ளி

Botanical Name- Hydrophila spinosa
Family - Acanthaceae
Engl - Long leaved barderia
Sinh - Neera mulliya

இது முட்களையுடையதாலும், தண்ணீர் தங்கும் சிறு பள்ளங்களில் வளருவதாலும் இந்தப் பெயர் பொருத்தமானது என்று கூறலாம். சுமார் 1 மீற்றர் உயரம் வரைக்கும் வளரக்கூடிய ஒருவகை குத்துச் செடி.

இரண்டொரு தண்டுகள் அடி வேரினின்றும் தோன்றி வளரும். அழுத்தமற்ற இத் தண்டுகள் சிறிது சிவப்பு நிறமுடையன. கணுக்கள் நெருக்கமாகவுள்ளன. கணுக்கள் தோன்றும் சுமார் 2 அங்குல நீளமுள்ள முட்களையும், இலைகளையும் காணலாம்.

செடி சுமார் ஓரடிக்கு மேல் வளர்ந்த பிறகு தான் முட்கள் தோன்ற ஆரம்பிக்கும். நீண்டு கத்திபோலுள்ள இலையின் இருபுறங்களிலும், தண்டிலும் சிறிய மெல்லிய சுணைகளுண்டு. இலையின் நீளம் சுமார் 5முதல் 7. செ.மீ அகலம் 1 முதல் 1.5 செ.மீ உள்ளன. பூக்கள் மங்கிய ஊதா நிறமுடையன. மிகச் சிறிய தட்டையான விதைகள் மங்கலான சிவப்பு நிறமுடையன.

கோடையில் செடிபட்டுக் காய்ந்துவிடும். திரும்ப மழைபெய்ததும் அடிவேரினின்றும் தளிர்க்க ஆரம்பிக்கும். இப்படி ஒரே இடத்தில் பல்லாண்டுகள் வாழ்கின்றன.

#### இனவிருத்தியும், பரம்பலும்

யாழ். மாவட்டத்தில் நீர்றைப்புள்ள இடங்களில் தானாகவே வளரும். எல்லா வகை மண்களிலும் காணலாம். ஆழமில்லாத நீர் தங்கியுள்ள பள்ளங்களில் நெருக்கமாக இருப்பதைக் காணலாம். வயல் வரம்புகளிலும் காணமுடியும். விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். சிறு கன்றுகளை பாத்திகளில் 30 செ.மீக்கு ஒன்றாக நட்டுப் பயிரிடலாம். எப்பொழுதும் ஈரம் இருக்கும்படிக்கு தண்ணீர் பாய்ச்சிக் கொண்டே இருக்க வேண்டும்.

⌘ இதில் தண்டு சுத்தப் பசுமையும், பூக்கள் சுத்த வெண்மையுள்ள ஓர் இனமுண்டு.



இதன் இலைகளையும் இதேபோல் உபயோகிக்கலாம். இவ்வினம் மிக அரிதாகவே காணப்படும்.

#### மருத்துவப் பயன்கள்

⌘ 20 கிராம் இலைச்சாற்றை வெந்நீருடன் அருந்தலாம். அல்லது இலைகளை நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து 1 அரை தேக்கரண்டி தூளையும் வெந்நீரில் அருந்த சிறுநீர் எரிச்சல் நீங்கி, சிறுநீர் நன்கு வெளிப்படும்.

⌘ 40 கிராம் இலை, 100 கிராம் மாவுடன் சேர்த்து அடை தயாரித்து உண்ணலாம். அல்லது 30 கிராம் இலையை 90 கிராம் முளைக் கீரையுடன் கலந்து சமைத்து உண்ணலாம். இதனால் உடல் குளிர்ச்சியடைவதோடு உடலிற்கு நல்லபலத்தைக் கொடுக்கும்.

⌘ நீர் முள்ளிச் செடிகளை வேருடன் பிடுங்கி அவற்றை நன்றாக தூய்மை செய்ய வேண்டும். அவற்றை சிறு சிறு துண்டுகளாக வெட்டி, உரலில் போட்டு இடிக்க வேண்டும். அதனை ஒரு மண்சட்டியில் இட்டு 1.3 லீற்றர் தண்ணீர் விட வேண்டும். அதில் பெருஞ்சீரகம், கொத்தமல்லி, நீர்முள்ளி விதை ஆகியவற்றை ஒவ்வொன்றிலும் 60 கிராம் இடித்து சேர்க்க வேண்டும். அதை அடுப்பிலேற்றி கொதிக்க வைத்து 300 மில்லியாக வற்றியதும் 30 மில்லி அளவு காலை, மதியம், மாலை அருந்த உடல்வீக்கம், கால்வீக்கம் குறையும். சிறுநீர்த் தடைகள் நீங்கும்.

⌘ காய்ந்த நீர் முள்ளியை நன்றாக கொளுத்தி அதன் சாம்பலை மெல்லிய தூளாக்கி அரித்து ஒரு புட்டியில் வைத்துக் கொள்ளவும்.

இந்தச் சாம்பலை தினமும் ஒரு தேக்கரண்டி அளவு வெந்நீரில் கலக்கி குடித் தால் சிறுநீர்த்தடைகள் நீங்கி, வீக்கங்கள் கரையும். அல்லது இந்தச் சாம்பலை நீரில் கரைத்து வீக்கங்களிற்கு பற்றிடலாம்.

⌘ 30 கிராம் நீர் முள்ளி விதைகள், 100 கிராம் வாதாம்பருப்பு, 30 கிராம் வெள்ளரி விதை, 20 கிராம் கசகசா ஆகியவற்றை நீரின் நன்கு ஊறவைக்க வேண்டும். சிறிது நேரம் கழித்து அதை நன்றாக அரைத்து தினமும் இரவில் காய்ச்சி ஆறிய பசுவின் பாலில் கரைத்துக் குடிக்க ஆண்மைத் தன்மை குடிவிந்து கெட்டிபடும். நீர் முள்ளி விதைகட்கு விந்துலை பெருக்கும் தன்மையுண்டு. ஆண் மலடு உடையவர்கள் மேற்படி முறையை பயன்படுத்தலாம்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

⌘ 40 கிராம் நீர்முள்ளி விதை, 40 கிராம் சிறு நெஞ்சில் விதை, 20 கிராம் வெள்ளரி விதை ஆகியவற்றை நன்றாக உலர்த்தி 650 மில்லி தண்ணீரில் இட்டு 100 மில்லியாக சுண்டக்காய்ச்சி தின்சரி காலை, மாலை 30 மில்லி அளவு அருந்த சிறுநீர் எரிச்சல், கல்லடைப்பு, உடல் எரிச்சல் ஆகியன நீங்கும்.

⌘ நீர் முள்ளி விதைகளை சூரணித்த பாலில் உட்கொண்டுவந்தால் இரத்த விருத்தி உண்டாகும். ❄ ❄ ❄

# கல்விப் பாரம்பரியமும் சேர்.பொன் இராமநாதனும்

05



**சைவ மங்கையர் வித்தியாலயத்தின் ஆரம்பகால அதிபராக இருந்த செல்வி நாகம்மாள் காசிப்பிள்ளையின் ஞாபகார்த்த விழாவைச் (23.05.2009) சைவமங்கையர் கழகம் நடாத்திய போது அதில் கலந்துகொண்ட பேராசிரியர்சி.க.சிற்ரம்பலம்"சைவக்கல்வி பாரம்பரியமும் சேர்.பொன் இராமநாதனும் - ஒருநோக்கு" என்ற பொருளில் ஆற்றிய உரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.**

ஆறுமுக நாவலரின் பணிகளில் பலனாக ஏற்பட்ட சைவ மறுமலர்ச்சியிலும், கலாசார அபிவிருத்தியிலும் , கல்வி வளர்ச்சியிலும், ஆராய்ச்சியிலும் குமாரசுவாமி முதலியாரின் சந்ததியினர் தமது வாழ்க்கையை இணைத்துக்கொண்டனர். இக் குடும்பத்தினரே ஒரு நூற்றாண்டுக்கு மேலாக , அரசியலில் ஈழத்தமிழர்களின் தலைவர்களாக விளங்கினார். கொழும்பில் தமிழரின் கலாச்சார மரபுகளைப் பேணிக்கொள்வதற்கான சமய, கலாசார நிறுவனங்களையும் இக் குடும்பத்தினரே அமைத்துக்கொடுத்தார்கள். தம்முன்னோர் விட்டுச் சென்ற செல்வங்களையும் தாம் தேடிய செல்வங்களையும் சமுதாயப் பணியிலே செலவிட்டனர். இவ்வாறு நோக்கும் போது ஈழத்து வரலாற்றில் கல்வி, கேள்விகளோடு தமது செல்வத்தையும் இவர்களைப் போன்று சைவக்கலாச்சார விழுமியங்களைப் பேணிப் பாதுகாப்பதில் வேறு ஒரு குடும்பமும் ஈடுபடவில்லை. எனத் துணிந்து கூறலாம்.

மரபுவழியான சைவ சமய ஆசாரங்களை மிகவும் இறுக்கமாகப் பின்பற்றிய இவர்கள் சாத்திர நூல்களிலும், ஒழுக்க நூல்களிலும் சான்றோர் ஒழுக்கம் எனச் சொல்லப்பட்டனவற்றையே தமது ஒழுக்கமாகக் கொண்டனர். அத்துடன் நவீன முறைக் கல்வியையும் நவீன உபகரணங்களையும் தமது முன்னேற்றத்துக்குப் பயன்படுத்திய தோடு "தாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்ற கோட்பாட்டுக்கமைய சமூக முன்னேற்றத்திற்கும் அதனைப் பகிர்ந்து கொண்டனர். சைவம் சார்ந்த தமிழரின் சால்பினை வளம்படுத்திய தோடு அதன் சிறப்புகளை இந் நாட்டிலுள்ள பிற சமூகத்தவரும் மேல்நாட்டவரும் மதிக்கத் தக்க வகையிலே அவற்றை அவர்களுக்கு அறிமுகம் செய்தபெருமை இவர்களுக் குண்டு.

தமதுகல்வித் தகைமை மூலமும் பதவிகளாற் கிடைத்த செல்வாக்குகள் தொடர்புகள் மூலமும் , அந்நோக்கத்தை நிறை வேற்றப் பாடுபட்டனர். இப் பணியிலே சேர் முத்துக் குமாரசுவாமி (1833-1879) (சேர் .பொன் இராமநாதனின் தாய் மாமன்), கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி (1877-1947)(சேர்.முத்துக்குமாரசுவாமியின் மகன்) சேர்.பொன் இராமநாதன் (1851-1930) ஆகிய மூவரும் சர்வதேச புகழ்பெற்றவர்கள்.


ஈழத்தின் அன்றைய சட்ட சபையில் தமிழர் பிரதிநிதியாக இருந்த சேர் முத்துக்குமார சுவாமியின் மறைவுக்குப் பின்னர் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு சேர் .பொன்.இராமநாதன் அவர்களை ஆசீர்வதித்து முன்மொழிந்து அவரை வெற்றி பெற வைத்து மறைந்தார் ஆறுமுக நாவலர் அவர்கள். அவர் சிவபதம் அடைய முன்னர் கலந்துகொண்ட இறுதியான பொது நிகழ்ச்சி இது என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆறுமுக நாவலரின் வாரிசாக மட்டுமன்றி அவரால் சாதிக்க முடியாத பலவற்றைச் சாதித்த பெருமை சேர் பொன் இராமநாதன் அவர்களுக்கு உண்டு.இது பற்றி பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

நாவலர் பெருமானின் ஆதரவோடும் ஆசியோடும் ஆரம்பமாகிய இராமநாதனின் அரசியல் வாழ்க்கையும், பொதுப்பணிகளும், சாதனைகள் பலவற்றைக் கண்டு மங்கலம் பொலிந்தனவாக நிறைவு பெற்றன. இலங் கைச் சைவர்களின் நவீன கால வரலாற் றிலே ஆறுமுக நாவலருக்கு அடுத்த சிறப் பிடத்தைப் பெறுகின்றவர் இராமநாதன். நாவ லர் பெருமானின் வாழ்வு , 1879 இல் நிறைவு எய்தியது .இராமநாதனின் அரசியல் வாழ்க்கையும் பொதுப் பணிகளும் அவ் ஆண்டிலே தொடங்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

நாவலப் பொருமான் தொடங்கிய பணிகள் சிலவற்றை அவருக்குப் பின் தொடர்ந்து நிறைவேற்றும் தகைமையினையும் , வாய்ப்பினையும் இராமநாதன் பெற்றிருந்தார். சைவப்பிரசாரகராகவும், சைவ சமய காவலராகவும் விளங்கிய நாவலர் தமது ஈடினை அற்ற நாவன்மையால் நாவலர் என்ற பட்டத்தினைப் பெற்றார். சைவாபிமானமும், சமய ஞானமும் ஒருங்கே அமையப் பெற்ற இராமநாதன் ஆங்கிலத்திலே கேட்போர் அதிசயிக்க வல்ல நவான்மை கொண்டவர். ஆங்கில மொழியிலே நாவலர் என்று உலகிலே புகழ்ந்து பாடப்பெற்றவர்.

சேர் பொன் இராமநாதன் அவர்கள் இலங்கை அரசியலிலேயே 50 ஆண்டுகளாக நீடித்த தனியான பெருமைக்குரிய வராக விளங்கினார். தமது முன்னோரின் பண்புகளான சமய அபிமானம் , நிதானம் பொது நல வேட்கை என்பனவற்றை இயல்பாகவே நிரம்பிய அளவிலேயே அவர் தம் குணநலன்களாகப் பெற்றிருந்தார்.

ஆங்கில மொழியிலும் அதித புலமைத் துவம் கொண்ட இவர் தமிழ், சிங்களம், சமஷ்கிருதம், பாளி, இலத்தின், கிரேக்கம் ஆகிய மொழிகளிலே தேர்ச்சி பெற்றிருந்தார். எனினும் அவருக்குரிய தனிச் சிறப்பு யாதெ னில் தமிழில் பேசினால் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துவது மட்டுமன்றி ஆங்கிலம் தெரியாதவர் போன்று தூய தமிழில் பேசும் ஆற்றலாகும். இதுபற்றி தமிழ் நூல்களை பதிப்பித்த தமிழ்த் தாத்தா என அழைக்கப்பட்ட



சட்ட சபையில் –
சேர்.பொன்னம்பலம் இராமநாதன்

உ.வே.சுவாமிநாதையர் பின்வருமாறு கூறுகிறார்.

நான் கேட்ட தமிழ் பேச்சுக்களிலே தமிழ் மனதைக் ஆங்கிலத்தோடு இசைத்து குளப்பாமல் ஆங்கிலம் அறியாதவர் போலவே அவர் (இராமநாதன்) பேச்சுத்திறமையை அறிந்திருந்தேன்.

இவரது தமிழ் புலமையால் தமிழ் நாட்டில் திருக்குறள் மகாநாட்டுக்கு தலைமை தாங்கவும் ,முதல் முதலாக நடைபெற்ற சைவ சித்தாந்த மகாநாட்டுக்கு தலைமை தாங்கவும் அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மாமனாராகிய முத்துக்குமாரசுவாமி, சட்ட நிபுணராகிய ரிச்சாட் மோர்கன் போன்ற மாமேதைகளில் சட்டம் பயின்ற அவர் சட்டத்துறை

**பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்**

யிலேயே பெருவல்லவரானார். அவர் பெற்றிருந்த வாதத்திறமை அவர் காலத்திலேயே ஈடுடினை அற்றதாகும். சென்னையில் கல்வி கற்ற காலத்தில் தமிழ் நூல்களைத் தேடிப்பதிப்பித்து வந்த தமிழர் அறிஞர் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் ஆதரவும் இவருக்கு கிடைத்தது.

இதனால் இவரின் தமிழ் ஆர்வமும் தமிழ் இலக்கியங்கள் மேலான அபிமானமும் வலுவடைந்தன. சைவாபிமா னம் மிக்க இவருக்கு தஞ்சாவூரைச் சேர்ந்த சமய ஞானியாகிய தற்பரானந்தரின் தொடர்பும் ஆசியும் மேலும் சமய ஞானத்தில் ஈடு பாடு கொள்ள வழி சமைத்தது. (தொடரும்)

## வடக்கில் இருந்து செல்வோரை கொழும்பில் பதிவு செய்யும் நடவடிக்கைக்கு ஐ. மா . முன்னணி எதிர்ப்பு

வடக்கில் இருந்துகொழும்புசெல்லும் மக்களை பதிவு செய்யும் நடைமுறைக்கு ஜனநாயக மக்கள் முன்னணி கட்சி கடும் எதிர்ப்புவெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து எவ்வித தடையுமின்றி கொழும்புக்குச் செல்ல முடியும் என அறிவிக்கப்பட்ட போதிலும் கொழும்பில் காவல்துறையினர் வடக்கு மக்களை பதிவு செய்துவருவதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் மாகாண சபை உறுப்பினர் குமரகுருபரன் தெரிவித்துள் ளார்.

மக்கள் நலன் கருதி அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கையை காவல்துறை யினர் உதாசீனம் செய்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லும் பயணிகள் எவ்வித கெடுபிடிகளும் இன்றி பயன் அளிப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத் துள்ளார்.

எவ்வாறுஎனினும் கடந்த 20ஆம் திகதி முதல் எதிர்வரும் 29 ஆம் திகதிவரையில் வடக்குமக்களை பதிவு செய்யும் விசேட நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டு வருவதாக வெள்ளவத்தை காவல் துறையினர் அறிவித் துள்ளனர் . (ஓ-4)



சிவலிங்கயோக கேந்திர நிலையத்தினால் மாதகல் மயில் வாகனப்புலவர் மண்டபத்தில் நடைபெற்ற யோகாசன நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் சான்றிதழ் பெற்ற மாணவர்களுடன் நிறுவன உத்தியோகத்தர்களான பா.சாந்தரூபன்,நா.நவராஜ். ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## ஐக்கிய தேசியக் கட்சியின்
## நுவரேலியா மாவட்ட பிரதான அமைப்பாளராக எஸ்.பி.திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்

ஐக்கிய தேசியக்கட்சியின் நுவரேலியா மாவட்ட பிரதானஅமைப்பாளரான கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். நுவரேலியா மாவட்ட பிரதான் அமைப்பாளராக தெரிவு செய்யப்பட்ட எஸ்.பி.திஸாநாயக்கவிற்கு எதிர்வரும் 28ஆம் திகதி விசேட வரவேற்பு அளிக் கப்படவுள்ளது.

நுவரேலியா மாவட்டத்தின் சகல ஐக்கிய தேசியக்கட்சி தொகுதி அமைப்பாளர்கள் இளைஞர் மன்ற பிரதிநிதிகள் மற்றும் மகளிர் சங்க உறுப்பினர்கள் அனைவரும் இந்த நிகழ்வில் கலந்தகொள்ளவுள்ளனர்.

இதேவேளை எஸ்.பி.திஸாநாயக்க விரைவில் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ள உள்ளதாக ஆளும் கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கும். அதேவேளை இந்தக் கட்சிகள் அதனை மறுக்கின்றனர். (ஓ-4)

## மத்திய மாகாண பாடசாலைகளில் பன்றிக்காய்ச்சல் அபாயம் உடன் தடுக்குமாறு ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

மத்திய மாகாண பாடசாலைகளில் மாணவர்களிடையே (இன்புளுவன்ஸா வைரஸ்) பன்றிக் காய்ச்சல் பரவும் அபாயம் காணப் படுவதால் மத்திய மாகாணப் பாடசாலைகளை மூடிவிடுவதா அல்லது நடத்துவதா என்ற இழுபறி நிலையை விட்டு விட்டு இந் நோயைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் உடனடியாக இறங்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் இது சம்பந்தமான உயர் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார். அக்கோரிக்கையில்,

மத்திய மாகாணத்தில் இந்நோய் பரவி வருவதால் 9 மாணவர்கள் பலியானதுடன் 30 க்கும் மேற்பட்டவர்கள் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் மத்திய மாகாண கல்வி அமைச்சினால் இம்மாகாண ப் பாடசாலைகளை மூடி விடுவதென எடுக்கப்பட்ட தீர்மானம் தற்போது இழுபறி நிலையில் உள்ளது.

இந்நோயைத் தடுப்பதற்கான முயற்சிகள் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை. எனவே மத்திய மாகாணப் பாடசாலைகளை மூடி விடுவதா அல்லது தொடர்ந்தும் நடத்துவதா என்று சிநிதித்துக் கொண்டிருக்காமல் இந் நோயைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும்.

கல்வியமைச்சு இந்நோயைத் தடுப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்னதாகவே நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாகத் தான் இன்று இந்நோய் மாகாணமெங்கும் பரவும் அபாயத்தை எட்டியுள்ளது எனவே மாகாணக் கல்வியமைச்சுக்கும் இடையில் தற்போது இது தொடர்பாக ஏற்பட்டுள்ள இழுபறி நிலையைத் தளர்த்தி இந் நோயைப் பரவ விடாமல் உட்னடியாக தடுப்பதற்கான நடவடிக்கைகளில் இறங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார் . (ஓ-4)

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 2 விதி எண் : 9

### உடலமைப்பு

பிறந்த எண் 2, விதி எண் 9 ஆகப் பிறந்தவர், சந்திரன், செவ்வாய் இருவரின் கூட்டு ஆதிக்கத்திற்குட்டபட்டவர்களாவர். இவர்கள் சராசரி உயரமுள்ளவராக இருந்தாலும் கம்பீரத் தோற்றமுள்ளவர். இவர்கள் தோற்றம் பார்ப்பவர்களுக்கு அச்சத்தை உண்டாக்கும் உடல் பலம் கொண்டவர்கள்.

### மன, குணவியல்பு

இவர்கள் மிகுதியான மனபலம் கொண்டவர்களாக இருப்பர். அஞ்சா நெஞ்சம் கொண்டவர்களாக இருப்பர். தவறு என்றும், பிறருக்குத் தீங்கு என்று தெரிந்தாலும் அதைச் செய்வர். பிறர் கஷ்டப்படுவார்களே என்று எண்ணமாட்டார்கள். அதுமட்டுமல்ல, தனக்குக் கஷ்டம் வருமே என்று கூட அஞ்சமாட்டார்கள். அந்த அளவுக்கு துணிச்சல்காரராக இருப்பர். தொல்லை ஏற்பட்ட பிறகு வருந்துவர்.

முன் யோசனை கொஞ்சமும் இல்லாதவர்கள். சொன்னாலும் கேட்க மாட்டார்கள். பிடிவாத குணம் கொண்டவர்களாகவும் இருப்பர். இவர்கள் நிதானமாகவும், பிறர் மனம் கனியும் படியும் பேசமாட்டார்கள். அதனால் இவர்களுக்கு பிறருடன் போராட வேண்டிய கட்டாயம் அடிக்கடி ஏற்படும். இவர்களை சண்டைக்காரர் என்று கூறி பலரும் அஞ்சி ஒதுங்குவர்.

இவர்களுக்குஎதிர்ப்புகள் இருந்து கொண்டே இருக்கும். அதற்காக சிறிதும் கலங்கமாட்டார்கள்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்கு திருமணம் நடப்பது கடினம். அப்படி காலம் கடந்து பல சிரமங்களுக்குப் பின் நடந்தாலும் குடும்ப வாழ்க்கையில் பிரச்சினைகளே அதிகம் ஏற்படும். வாழ்க்கைத் துணைவருடன் ஒத்துவாழ்வது கடினமாகும். போராட்டமான வாழ்க்கையாகத்தான் இருக்கும்.

### தொழிலும் வருமானமும்

இவர்கள் எதிர்த்து வாதாடுவதில் வல்லவர்களாக இருப்பதால் வழக்கறிஞர், விரிவுரையாளர், ஆசிரியர் போன்ற தொழில்கள் ஏற்றவை. அரசு, தனியார் நிறுவனங்களில் பணிபுரிவர். அது தவிர, விவசாயத்திலும் மேன்மை உண்டு. கமிஷன் ஏஜண்டுகளாகவோ காண்ராக்டர்களாகவோ தொழில் புரிந்து லாபம் பெறுவர்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு உஷ்ண மிகுதியால் இரத்தக் கொதிப்பு, மூலம் போன்ற நோய்கள் வரலாம். காய்ச்சல், அம்மை நோய்களும் வரக்கூடும். உஷ்ணக் கட்டிகளும், சிரங்குகளும் வரும்.

### சாதக பாதக எண்களும், திகதியும்

இவர்கள் சுக்கிரன் புதன் ஆதிக்கத்திற்குட்டபட்ட 6, 5 ஆம் அது தொடர்பான விஸ்தார எண்களில் யோகமளிக்கக்கூடியது எதுவோ அதில் தம் பெயரை மாற்றிக் கொள்ள, அதிர்ஷ்டமாகும்.

அது தொடர்பான எண்களில் தம் நிறுவனங்களுக்கும் பெயரிட யோகமாகும்.

அதிர்ஷ்ட எண்களும், திகதிகளும் கூட 6,5 தொடர்புடையவே ஆகும்.

ஆனால் செவ்வாய் ஆதிக்கத்திற்குட்பட்ட 9 ஆம் அது தொடர்பான எண்களும், திகதிகளும் யோகமற்றவை. விலக்கத்தக்கவை.

### பெயர் அமைக்க கவனிக்க வேண்டியவை

இதுவரை பிறந்த எண் 2 க்கு விதி எண் 1 முதல் 9 வரையிலான பலன்களைக் கண்டோம்.

பிறந்த எண்ணுக்கு விதி எண் நட்பாக இருக்குமானால் இதுவரை கூறப்பட்ட பலன்கள் நடக்கும். பகையாக இருக்குமானால் பலன்களிலும் நிச்சயமற்ற தன்மை காணப்படும். அந்நிலையில் தான் இரண்டு எண்களுக்குப் பொருத்தமான யோகப் பலன் தரும் எண்களை அமைத்துக் கொள்வதால் நற்பலன்களைப் பெறக்கூடும்.

இரண்டு எண்களும் ஒன்றுக்கொன்று பகையாக இருக்கும் நிலையில், இவர்களுக்கு நல்ல பலனளிக்கும் எண்கள், திகதியையும் பாதக பலனளிக்கும் எண்கள் திகதியையும் வரையறுத்துக் கூறமுடியாத இக்கட்டான நிலை ஏற்படவும் கூடும்.

அந்த சந்தர்ப்பங்களில் அவர்களின் நடைமுறை வாழ்க்கையில் அதுவரை நடந்த நல்ல நிகழ்ச்சிகள், கெட்ட நிகழ்ச்சிகளைக் குறித்து அதில் நல்லது நடந்த எண்கள் (பாஸ் செய்த சர்டிபிகேட் எண், அப்பாயிண்ட் மெண்ட் ஆர்டர் எண், திருமண நாள் போன்றன) மற்றும் திகதியை நல்ல பலனளிக்க வல்லவை என்றும், அதைப் போன்று தீய நிகழ்ச்சி நடந்த எண்களும் திகதியும் யோகமற்றவை என்றும் நிச்சயிக்கலாம்.

இதுவரை கூறப்பட்ட மன, குணவியல்பு, குடும்ப வாழ்க்கை போன்றவற்றில் தீயதாக இருப்பின், பிறவி எண். விதி எண்ணுக்குப் பொருந்தும் பெயர் அமைத்துக் கொள்ள அதனால் எற்படும் கொடிய பலன் தவிர்க்கப்படும்.

ஒவ்வோர் எண்ணுக்குரியவருக்கும் கூறப்பட்டுள்ளவை அவர்களுக்குப் பொருந்தக் கூடிய தொழில்கள், அவர்களுக்கு பெயர் எண், பிறவி மற்றும் விதி எண்ணுக்குப் பொருத்தமாக, யோகமுள்ளதாக இருப்பின் தொழில் முன்னேற்றமும், பொருளாதாரத்தில் செழிப்பும் பெறலாம்.

ஒரு சிலர் தமக்குப் பொருந்தாத தொழிலில் ஈடுபட்டிருப்பாரேயானால் அவர்கள் பொருந்தும் தொழிலுக்கு தம்மை திருப்பிக் கொண்டு முன்னேறலாம்.

ஆரோக்கியக்கேடு இயல்பாக ஏற்படக் கூடியதே. தம் பெயரை பொருத்தமுள்ளதாக அதிர்ஷ்டமாக அமைத்துக் கொண்டால் நோய் ஏற்பட்டாலும் அதனால் பெருமளவு பாதிப்பின்றித் தவிர்க்கப்படலாம்.

இனி பெயரை அமைத்துக் கொள்வதில் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்களை ஆராய்வோம்.

பிறந்த எண் 2 ஆகக் கொண்டவர்கள் சந்திரனின் ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். சந்திரன் தேய்ந்து வளர்பவன். நிலையற்றவன். அதனால் இவர்களுக்கு விதி எண் எதுவாக இருந்தாலும் அவர்கள் 2 ஆதார எண்வருமாறு பெயர் அமைப்பதை தவிர்க்க வேண்டும்.

பொதுவாக 2 எண் வருமாறு யாருமே பெயர் அமைக்காமல் இருப்பது சிறப்பாகும்.

சுக்கிரனின் ஆதிக்கத்திற்குட்பட்ட 6 ஆதார எண் வருமாறு பெயர் அமைத்துக் கொள்வது யோகமானது என்று கூறப்பட்டாலும், விதி எண் 3 ஆகக் கொண்டவர்கள் மட்டும் 6 ஐ தவிர்க்க வேண்டும். அவர்கள் புதனின் ஆதிக்கத்திற்குட்பட்ட 5 எண் வருமாறு அமைத்துக் கொள்ளலாம். அல்லது குருவின் ஆதிக்கத்திற்குட்பட்ட 3 இல் கூட தம் பெயரை அமைக்க யோகமாகும்.

செவ்வாய் ஆதிக்கத்திற்குட்பட்ட 9 ஆம் அது தொடர்பிலான எண்களும் மிகவும் கெடுதலானவை. இந்த 2 எண்காரர்கள்9 வருமாறு அமைக்க நேர்ந்தால் பல விதமான சோதனை வேதனைகளுக்கு ஆளாக நேரும். விதி எண் 9 ஆகக் கொண்டவர்கள் கூட 9 ஐத் தவிர்ப்பதே சிறந்தது. அவர்களுக்கு கெடுதலையே செய்யும்.

ராகு கேதுவின் ஆதிக்கத்திற்குட்பட்ட 1,7 எந்த எண்காரருக்கும் சிலாக்கியமானதல்ல, ஆனால் 2 எண்காரர்களில் விதி எண் 2,3 கொண்டவர்களுக்கு மட்டும் நன்மை தருகிறது. அதிலும் 34, 43 போன்ற சில குறிப்பிட்ட எண்கள் மட்டுமே யோகமான பலன் தருவதாக அமையும். அதனால் அதை நன்கு ஆராய்ந்த பின்பே அமைத்துக் கொள்ள வேண்டும்.

பிறந்த எண் 2 ஆகக் கொண்டவர்கள் இதையெல்லாம் கவனித்து யோகப் பலனளிக்கவல்ல எண்ணுக்கு தம் பெயரையும், நிறுவனப் பெயரையும் அமைத்துக் கொள்ள, முன்னேற்றமும், சந்தோசமான வாழ்க்கையும் பெறலாம். (தொடரும்)

## பெருந்தோட்டப் பகுதிகளில் 60 ஆயிரம் பேருக்கு அடையாள அட்டை இல்லை

(கொழும்பு)

பெருந்தோட்டப் பகுதிகளில் வசிக்கும் சுமார் 60 ஆயிரம் பேருக்கு அடையாள அட்டைகள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் எந்தவொரு தேர்தல் அறிவிக்கப்பட்டாலும் தேர்தல்களில் வாக்களிக்க முடியாத நிலை பெருந்தோட்ட மக்களுக்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பெருந்தோட்டப் பிரதேசத்தில் வசிக்கும் சுமார் 60 ஆயிரம் பேருக்கு அடையாள அட்டை இல்லாத காரணத்தினால் தேர்தல்களில் வாக்களிக்க முடியாத நிலை உருவாகியுள்ளதென பிரதி நிதி அமைச்சர் வீ. புத்திரசிகாமணி தெரிவித்துள்ளார்.

2008 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலை பரிசீலனை செய்த போது இந்தத் தகவல்கள் கிடைக்கப்பெற்றதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-4)



அவுஸ்திரேலியாவிலிருந்து தமது பிறந்த கிராமத்துக்கு வந்திருந்த பிரபல சமூக சேவையாளரும் பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் ஸ்தாபகத் தலைவருமான க. நடராசா தாம் ஆரம்பக் கல்வி கற்ற மந்துவில் றோ.க. தமிழ் வித்தியாலயத்திற்கு உபகரணங்களையும் தொலைக்காட்சிப் பெட்டியையும் அப்பாடசாலை அதிபரிடம் அன்பளிப்பாக கையளிப்பதையும் படத்தில் காணலாம்.

## இந்திய மருந்துப் பொருட்களுக்கு இலங்கை சுகாதார அமைச்சு இரண்டு வருட தடை

### இந்திய நிறுவனம் எதிர்ப்பு தெரிவிக்கவுள்ளது

(கொழும்பு)

தமது மருந்துப் பொருட்களுக்கு இலங்கையில் இறக்குமதி தடை விதிக்கப்பட்டமைக்கு எதிராக இந்திய நிறுவனம் ஒன்று எதிர்ப்பை வெளியிடவுள்ளது.

இந்த எதிர்ப்பு இந்திய உயர்ஸ்தானிகரகத்தின் ஊடாக வெளிக்காட்டப்படவுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

வரையறுக்கப்பட்ட கிளிச் மருந்து நிறுவனமே இந்த எதிர்ப்பை வெளிக்காட்டவுள்ளது.

அண்மைக்காலமாக இலங்கையில் ஊசி மருந்துகளுக்குள் கண்ணாடித் துண்டுகளும் ஈக்களும் வேறு பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டமையானது இலங்கை சுகாதார அமைச்சுக்கு எதிராக பலத்த விமர்சனங்களை ஏற்படுத்தியது.

இதனையடுத்து 5 இந்திய நிறுவனங்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும் மருந்துப் பொருட்களுக்கு இலங்கையின் சுகாதார அமைச்சு இரண்டு வருட தடையை விதித்தது.

இந்த நிலையிலேயே அதில் ஒரு நிறுவனம் தமது எதிர்ப்பை வெளிக்காட்டவுள்ளது. (ஓ-4)

## பொன்சேகாவை பொது வேட்பாளராக ஏற்றுக்கொள்ளத் தயார்

### ஐ.தே.க. எம்.பி திஸ்ஸ அத்தநாயக்க

முன்னாள் கூட்டுப்படைகளின் கட்டளைத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவை பொது வேட்பாளராக ஏற்றுக் கொள்ளத் தயார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார் என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் பொன்சேகா பொது வேட்பாளராக நியமிக் கப்பட வேண்டும் என்பதே மக்களின் நோக் கம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் ஏனைய கூட்டணி கட்சிகளுடன் இணக்கப்பாடு ஒன்றை எட்ட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள கூட்டத்தின் போது பொதுவான வேட்பாளர் தொடர்பிலான இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஓ-4)

எம் மதமும் சம்மதம் என்று
தின்னும் மண் சொன்னது.
- சக்கரவர்த்தி

வலம்புரி

# முறிகண்டியானை தரிக்க யாரேனும் குரல் கொடுப்பரோ

முறிகண்டி என்றவுடன் முறிகண்டிப் பிள்ளையாரின் நினைவே எம் எல்லோரையும் ஆட்கொள்ளும். சமய பேதம் கடந்து நிறைவு ஏற்படுவதை எல்லோரும் ஏற்றுக் கொள்வர்.

'முறிகண்டி' என்பது மருவிய பெயர் என்றும் முறிவண்டி என்பதே அந்த இடத்தின் உண்மைப் பெயர் என்றும் கூறுவர்.

விநாயகரின் முறிந்த வண்டி என்பதால் அப்படிப் பெயர் ஏற்படக் காரணமாயிற்று எனக் கூறுவதை எல்லாம் மீளவும் தெரிவித்து நிலைமையை குழப்ப விரும்பவில்லை.

அது இலங்கையில் இந்து சமயிகளாக பிறந்வர்களுக்கு அழகுமல்ல. இலங்கைத் தீவில் இந்து சமயத்தில் பிறந்து விட்டால் மௌனமாக இருப்பதைவிட வேறு வழியில்லை.

இந்து சமயத்தவர்களும் அப்படி. இந்து சமய நிறுவனங்களும் அதே வழி. ஆகையால் கட்டளைத் தளபதியில்லாத, ஆயுத பலம் எதுவும் அற்ற வெற்றுப் படைப்பிரிவாக இந்து சமயம் இருக்கின்றது என்பதால் அதிகம் அலட்டிச் சூழலை கெடுக்க விரும்பவில்லை.

இருந்தும் ஏ-9 பாதையில் பயணம் மேற் கொள்ளும் போது முறிகண்டிப் பிள்ளையார் கோவிலில் தரித்து நின்று தேங்காய் உடைத்து கற்பூரம் கொளுத்தி முறிகண்டிப் பிள்ளையாரை வழிபடும் மரபு தொன்றுதொட்டு வரும் வழமை.

ஆனால் தற்போது ஏ-9 பாதையால் வாகனங்கள் பயணிக்கின்ற போதிலும் முறிகண்டி கோவிலில் வாகனங்களை நிறுத்தி வழிபடும் முறை இல்லாது போயிற்று.

ஏ-9 பாதையில் பயணிக்கும் வாகனங்களை மாங்குளத்தில் நிறுத்தி ஐஸ்கிறீம் குடித்து ஆனந்தப்படுவதற்கு சந்தர்ப்பம் இருக்குமாயின் அந்த வாகனங்கள் முறிகண்டியில் நிறுத்தி ஒரு கணம் விநாயகனை நின்று வணங்குவதில் என்ன தடையுண்டு.

ஆக பிள்ளையார் இந்து சமயம் சார்ந்தவர் என்பதால் நிலைமை இப்படியாகிவிட்டது. முறிகண்டிப் பிள்ளையார் கௌதம புத்தராக, இயேசு பிரானாக, நபிகள் நாயகமா இருந்திருந்தால் இந்த விடயம் இலங்கை நாடாளுமன்றம் வரை ஒலித்திருக்கும்.

புத்தபிரானாயின் மகா நாயக்கர்கள் உண்ணாவிரதம் இருந்திருப்பர். இயேசு பிரானாயின் வத்திக்கானில் இருந்து கண்டனக் கடிதம் ஜனாதிபதியின் கைகளில் கிடைத்திருக்கும்.

நபிகள் நாயகமாயின் மிக நீண்ட பேரணி வெள்ளிக்கிழமைகளில் கலக்கி இருக்கும்.

ஆனால் முறிகண்டியில் பிள்ளையார் இருந்தமையால் எவரும் அதுபற்றி கவலைப்படவில்லை. கண்டனமும் இல்லை, கடிதமும் இல்லை, நாடாளுமன்றத்தில் எதிர்ப்பும் இல்லை.

ஓ முறிகண்டியானே! விநாயகா என் செய்வது எல்லாம் உன் தலைவிதி என்று இருப்பதை விட வேறு எங்களுக்கு என்ன தான் வழியுண்டு.

ஆனாலும் ஒன்று மட்டும் உண்மை நீயே இந்த உலகில் நாயகன். நீயே அறிவுக் கடல். விண்வெளிக்குச் சென்ற சுனித்தா வில்லியம் என்ற பெண்மணி தனது விண்வெளி பயணத்தின் போது உன்னையல்லவா எடுத்துச் சென்றார்.

அதற்கு அவர் தந்த விளக்கம், நீ அறிவின் வடிவம், ஞானத்தின் சொரூபன் எனவே அந்த விண்வெளி விஞ்ஞானி அறிந்த உண்மையை எங்கள் நாட்டின் மதவாதிகள் உணரவில்லை.

எல்லாம் பொறுத்தருள். எதற்கும் ஒரு முடிபுண்டு. அந்த முடிபில் நீயே இந்த பிரபஞ்சத்தின் திருஷ்டி என்ற உண்மையை உலகம் உணரும். அதுவரை முறிகண்டியில் நீ மௌனமாய் வீற்றிரு.

# எதிர்க்கட்சிகளின் ராஜதந்திர நகர்வுகள் அரசாங்கத்தை ஆட்டம் காண செய்துள்ளன

## அநுரகுமார திசா நாயக்க

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பதவியில் இருந்து இறக்குவது மட்டு மல்லாது அவரை வீட்டுக்கு அனுப்பி வைப்பதே ஜே.வி.பி.யின் குறிக்கோளாகும். இதனை மையமாகக் கொண்டே பொது வேட்பாளர் தொடர்பிலான பேச்சுக்கள் இடம் பெற்று வருகின்றன. மாறாக கூட்டுக் கட்சிப் பேச்சு என்பதற்கு இடமில்லை என்று அக்கட்சியின் நாடா ளுமன்ற குழுத்தலைவர் அனுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் ராஜதந்திர அரசியல் நகர்வுகள் அரசாங்கத்தை ஆட்டம் காணச் செய்துள்ளன. பீதியில் குழம்பிப் போயிருக்கும் ஆளும் தரப்பினர் வன்முறைகளினூடாக எதிர்க் கட்சிகளை நசுக்கிவிடலாம் என்று எண்ணுகின்றன. அரசாங்கத்தின் பகற்கனவு பலிக்கப் போவதில்லை என்றும் அவர் சொன்னார்.

ஜனாதிபதித் தேர்தல் எதிர்கட்சிகளின் பொது வேட்பாளர் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து மேலும் கூறுகையில்,

ஜே.வி.பி. யானது நிலையான கொள்கையுடன் செயற்பட்டு வருகின்ற கட்சியாகும். அத்துடன் நாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் மக்களை விட்டுக் கொடுப்பதற்குத் தயாரில்லை .

அரசாங்கத்தின் பயணமானது எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாததாகும். நிறைவேற்று அதிகாரம் என்று ஆயுதம் மக்கள் மீது தாக்குதல்களை நடத்திக் கொண்டிருப்பதை தொடர்ந்தும் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது .நாட்டில் ஜனநாயகத்துடனான நல்லாட்சி மலர வேண்டுமானால் நிறைவேற்று அதிகாரம் இல்லா தொழிக்கப்பட வேண்டும்.

அதற்கு முன்னதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் விரட்டியடிக்கப்பட வேண்டும். அதற்கான முதல் நடவடிக்கையே தற்போது அதிகாரத்தில் அமர்ந்திருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அதிகாரத்தில் இருந்து இறக்குவதாகும்.

கூட்டு சேருவதற்கான பேச்சுக்கள் எதனையும் ஜே.வி.பி. மேற்கொள்ளவில்லை அப்படியொரு தேவையும் எமக்கில்லை நாம் ஜே.வி.பி. யாகவே செயற்பட விரும்புகிறோமே தவிர ஹெல உறுமயவாக செயற்பட விரும்பவில்லை எதிர்க்கட்சிகளின் அரசியல் நகர்வுகள் பாரிய சக்தியாக உருவெடுத்து வருவதனால் அரசாங்கம் அச்சத்தில் உறைந்து போயிருக்கின்றது என்றார்.(ஓ-4)

# தமிழ் மக்கள் மீதான திடீர் அக்கறை வாக்குகளை பெறும் முயற்சியே

## கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன

அரசாங்கத்தின் செயற்பாடுகள் அனைத்தும் தேர்தல்கள் இலக்காகக் கொண்டே முன்னெடுக்கப்படுகின்றன. பொது மக்களின் நலன்கள் தொடர்பில் அரசாங்கத்திற்கு எந்த வித அக்கறையும் கிடையாது என்று இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

ஜனவரி மாதத்தில் இடைத்தங்கல் முகாம்களில் உள்ள சகல மக்களையும் மீள்குடியேற்றப் போவதாகக் கூறும் அரசாங்கம் தற்பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் முகாம்களுக்கு அனுப்பியுள்ளது.இதன் மூலம் தமிழ் மக்களுடைய வாக்குகளை பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் முயற்சிப்பது தெட்டத் தெளிவாகத் தென்படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

இடைத்தங்கல் முகாம்களில் உள்ள மக்களைச் சென்று பார்ப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது தொடர்பில் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் அவர் கூறுகையில் இடைத்தங்கல் முகாம்களில் அவதியுறும் பொதுமக்களைச் சென்று பார்வையிடுவதற்கும் அவர்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்து அதனைத்தீர்ப்பதற்கு முயற்சிப்பதற்கும் எதிர்க்கட்சிகள் பல கடந்த காலங்களில் அரசாங்கத்திடம் அனுமதி கேட்டிருந்தன. ஆனால் அரசாங்கம் அவர்களுக்கு அனுமதி வழங்காமல் வெளி நாட்டுப்பிரதிநிதிகள் பலரை அங்கு அழைத்துச்சென் றது.

அரசாங்கத்தின் இந்தத் திடீர் கரிசனையின் நோக்கத்தை தமிழ் மக்கள் நன்றாக அறிவார்கள் நாட்டில் யுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவந்துள்ள அரசாங்கம் தமிழ் மக்க ளுடைய பிரச்சினைக்கு முடிவு காணவில்லை. அவர்களுக்கு உரிய அரசியல் தீர்வு வழங்கப்படவேண்டும் அதன் மூலமே நாட்டில் ஐக்கியத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்த முடியும்.

வடக்கு கிழக்கில் பாதைகளை அமைப்பதோ அல்லது மின்சாரத்தை பெற்றுக்கொடுப்பதோ அம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையப் போவதில்லை எனவே அந்த மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வை பெற்றுக்கொடுக்கவேண்டும் என்றார். (ஓ-4)

# ஆங்கிலமொழி பாடத்திட்டத்தில் பேச்சு ஆங்கிலத்தை சேர்க்க நடவடிக்கை

(கொழும்பு)

பாடசாலைகளின் ஆங்கில மொழிப் பாடத்திட்டத்தில் பேச்சு ஆங்கிலத்தையும் ஓர் அலகாக தரம் 6 முதல் சேர்த்துக் கொள்வதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக பணிப்பாளர் அனுர திஸநாயக்க தெரிவித்தார்.

இது குறித்து அமைச்சின் இரண்டாம் கல்வி நவீன மயமாக்கல் திட்டத்தின் பணிப்பாளர் தெரிவித்ததாவது,

இப் புதிய அறிவிப்பினை ஆங்கில மொழிப்பாடத் திட்டத்தில் சேர்த்துக்கொள்வதற்கான அமைச்சரவை அங்கீகாரம் ஏற்கனவே பெறப்பட்டுள்ளது.

இப்புதிய அலகினை நடைமுறைப்படுத்துவதன் பொருட்டும் பேச்சு ஆங்கிலம் ஆங்கில மொழிப்பாடத்தில் ஓர் அலகாக கொள்ளப்படுவதன் நோக்கத்தை அடையும் பொருட்டும் 22 ஆயிரம் ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படவுள்ளனர்.

இதன் முதல் கட்ட நடவடிக்கையாக 380 ஆசிரியர்கள் ஆங்கில மொழி மற்றும் வெளிநாட்டு மொழி பயிற்சிக்காக இந்தியாவின் ஹைதராப்பாத் வெளிநாட்டு மொழிப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

அத்துடன் ஆங்கில மொழிமூலமான தொழில் வாய்ப்பைப் பெறுவது தொடர்பான பயிற்சிகளும் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

ஆங்கில மொழியில் சிறந்த பரீட்சையமுள்ள எதிர்கால சந்ததியினரை இந்நாட்டின் அபிவிருத்தியில் பங்குகொள்ளச் செய்வதும் புதிய அலகு ஆங்கில மொழிப்பாடத்தில் இணைத்துக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டதன் நோக்கங்களில் ஒன்றாகும் என அவர் தெரிவித்துள்ளார். (ஓ-4)

# ஏ எச் 1 என் 1 பரிசோதனைச் செலவை சுகாதார அமைச்சு ஏற்கும்

(கொழும்பு)

நொவெல் இன்ஃப்ளுவென்சா (ஏ எச்1 என்1) வைரஸ் தொற்றுக்குள்ளானதை அறிவதற்காக தனியார் பிரிவுகளில் நடத்தப்படும் பரிசோதனைகளுக்கான செலவீனத்தை வழங்குவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

நேற்று முன் தினம் சுகாதார அமைச்சில் மாகாண சுகாதார அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்து சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் அத்துல கஹதலியனகே இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

தேவை ஏற்படுமாயின் தனியார் ஆய்வுகூடங்களில் இந்தப் பரிசோதனைகளைச் செய்யுமாறு மாகாண அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் இதற்கான செலவை அமைச்சு வழங்குமெனவும் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிசோதனையைத் தனியார் ஆய்வுகூடத்தில் மேற்கொள்ள சுமார் 12 ஆயிரம் ரூபா செலவாகுமெனத் தெரிய வருகிறது.

இதேவேளை ஏ எச் 1 என் 1 வைரஸ் தொற்றைக் கண்டறியும் பரிசோதனைகளை மேற்கொள்ளக்கூடிய மேலும் இரு ஆய்வு கூடங்களை அமைக்கவும் அமைச்சு தீர்மானித்துள்ளது. இவை கண்டி பேராதனை போதனாவைத்தியசாலைகளில் அமைக்கப்படவுள்ளன. (ஓ-4)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மனிதன் தனது விதியைத் தானே அமைக்கிறான்



கோழைகளும் முட்டாள்களும் இதுதான் விதி என்று சொல்வார்கள் என்பதாகச் சமஸ்கிருதப் பழமொழி ஒன்று சொல்கிறது ஆனால் வலிமையுடைய மனிதனோ எழுந்து நின்று என்னுடைய தலைவிதியை நானே அமைத்துக் கொள்வேன் என்று சொல்கிறான். வயதாகி மூப்பு நிலையை அடைந்து கொண்டிருப்பவர்தம் விதியைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பார்கள் இளைஞர்கள் பொதுவாக ஜோதிடம் பக்கம் வருவதில்லை.

ஒருவனுடைய இயல்பு எப்படிப்பட்டது என்பதை உண்மையில் நீ தீர்மானிக்க விரும்பினால் அவன் செய்யும் பெரிய காரியங்களை கவனிக்காதே.

# செயற்கையாக இரத்தம்–தோல் உற்பத்தி இங்கிலாந்து விஞ்ஞானிகள் முயற்சி

மனித உடல் பாகங்களை அமைக்க உதவும் திசுக்களை செயற்கையாக உருவாக்குவ்தன் மூலம் தோல், இரத்தம், எலும்பு ஆகியவற்றை உருவாக்கும் முயற்சியில் இங்கிலாந்து நாட்டு விஞ்ஞானிகள் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

விபத்துக்களாலும் , நோய்களாலும் பலருக்கு எலும்பு முறிபு , கண்ணில் கோளாறு ஆகியவை ஏற்படுகின்றன இரத்தத்திலும் தோலிலும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. அவற்றை சரிசெய்ய முடியாமல் டாக்டர்கள் பெரிதும் சிரமப்படுகிறார்கள். இப்படி உடல் உறுப்புகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக இரத்தம், தோல், எலும்பு ஆகியவற்றை செயற்கையாக உருவாக்குவதற் கான முயற்சியில் இங்கிலாந்து நாட்டு விஞ்ஞானிகள் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

லண்டனில் உள்ள பல்கலைக்கழக கல்லூரியில் ராபர்ட் பிரவுன் தலைமையிலான விஞ்ஞானிகள் இது தொடர்பான ஆராய்ச்சியை மேற்கொண்டு இருக்கிறார்கள். மனித உடல் எடையில் 25 சதவீதம் கல்லகன் என்ற புரதச் சத்து நிறைந்து உள்ளது. இதில் இருந்து தண்ணீரை எடுத்து அதன் மூலம் மனித உடல் திசுக்களை உற்பத்தி செய்யும் வழி முறையை அந்த விஞ்ஞானிகள் உருவாக்கி இருக்கிறார்கள்.

இந்த திசுக்களில் ஒரு பகுதியை கொண்டு தான் தோல், எலும்பு, விழிவெண்படலம் ஆகியவை உருவாகின்றன என தெரிவிக்கப்படுகின்றது. (ஓ–4)

## சீன சுரங்க விபத்தில் பலியானவர்கள் தொகை 104 ஆக உயர்வு

சீனாவில் நிலக்கரிச் சுரங்கமொன்றில் ஏற்பட்ட எரிவாயு வெடிப்பில் பலியானவர்களின் தொகை 104ஆக உயர்ந்துள்ளது.

ரஷ்ய எல்லைக்கு அண்மையிலுள்ள ஹெய்லோங்கியாங் மாகாணத்தில் அரசாங்கத்தால் செயற்படுத்தப்படும் ஸின்ஸிங் சுரங்கத்தில் சனிக்கிழமை மேற்படி வெடிப்பு சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சீனாவின் மிகவும் பழைமையான இந்தச் சுரங்கத்தில் விபத்து இடம் பெற்றபோது 528 சுரங்கத் தொழிலாளர்கள் பணிபுரிந்து கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வெடிப்புச் சம்பவத்தையடுத்து நால்வர் தொடர்ந்து சுரங்கத்துக்குள் சிக்கியுள்ளதாகவும் அவர்களைத் தேடும் நடவடிக்கையில் மீட்புப் பணியாளர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளதாகவும் பிராந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடிப்பின் அதிர்வுகள் அங்கிருந்து10 கிலோமீற்றர் தூரம் வரை உணரப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஓ–4)

# 60 உலகத் தலைவர்கள் பங்கேற்கும் காலநிலை மாற்றம் தொடர்பான உச்சிமாநாடு டென்மார்க்கில் டிசம்பர் 7 முதல் 18 வரை

டென்மார்க்கில் எதிர்வரும் டிசம்பர் 7 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதிவரை நடைபெறும் காலநிலை மாற்றம் தொடர்பான உச்சிமாநாட்டில் 60 க்கும் மேற்பட்ட ஜனாதிபதிகளும் பிரதமர்களும் கலந்து கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றம் தொடர்பாக சட்டபூர்வமான உடன்படிக்கை யொன்றை ஏற்படுத்துவதை மேற்படி உச்சிமாநாடு நோக்காகக் கொண்டுள்ளது.

வழமையாக ஐக்கிய நாடுகள் சபையின் வருடாந்த காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் நாடுகளின் சுற்றுச்சூழல் அமைச்சர்களே பேச்சுவார்த்தைகள் நடத்துவது வழமையாகும்.

இந்நிலையில் இந்த வருட உச்சிமாநாட்டில் 192 நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு உலகளாவிய உடன் படிக்கை வரைபொன்றை வரையவுள்ளார்கள்.

இம்முறை நாடுகளின் தலைவர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்வது உச்சிமாநாடு வெற்றிகரமான ஒன்றாக அமைய உறுதுணையாக அமையும் என டென்மார்க் பிரதமர் லார்ஸ் லொக்கி ரஸ்முஸன் தெரிவித்தார்.

ஏற்கனவே இந்த உச்சிமாநாட்டில் கலந்து கொள்வது தொடர்பில் 60 க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் உறுதிப் படுத்தியுள்ளனர் என்று அவர் கூறினார்.

இம்மாநாட்டில் பிரித்தானிய பிரதமர் கோர்ட்டன் பிறவுண், அவுஸ்திரேலியப் பிரதமர் கெவின் ரூத் மற்றும் ஜேர்மனி , பிரான்ஸ் , ஸ்பெயின், ஜப்பான், இந்தோனேசியா ஆகிய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ–4)

## இந்தோனேசியாவில் பாரிய வெள்ளப் பெருக்கு 50 ஆயிரம்பேர் இடப்பெயர்வு

இந்தோனேஷியாவில் அடைமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் ஞாயிற்றுக்கிழமையிலிருந்து இதுவரை 50,000 பேர் தமது வீடு வாசல்களை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர்.

மத்திய ஜாவாவில் இடம்பெற்ற மண்சரிவு ஒன்றால் 50 க்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன.

இரு நாட்களாகத் தொடர்ந்து பெய்த மழை காரணமாக சுமத்ரா தீவின் வட பகுதியில் 2 மீற்றர் உயரத்துக்கு வெள்ளம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ–4)

# இலங்கையின் சட்டவிரோத குடியேற்றக்காரர் பிரச்சினைக்கு தனியாக தீர்வு காண முடியாது இந்தோனேசியா வெளிவிவகார அமைச்சர்

தற்போது இந்தோனேஷியாவில் தங்கியுள்ள 78 சட்டவிரோத குடியேற்றக் காரர்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் தலையீடு செய்ய வேண்டுமென இந்தோனேஷிய வெளிவிவகார அமைச்சர் மார்டி நடல்கவா தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அவுஸ்திரேலியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளது ஒத்துழைப்பு இன்றியமையாதது எனவும் தனியாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

குறித்த இலங்கை சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களுக்கு இந்தோனேஷிய அடைக்கலம் வழங்கியுள்ள செயற்பாடானது ஓர் தற்காலிக ஏற்பாடே தவிர அதனை நிரந்தரத் தீர்வாக கருத முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களின் ஆள் அடையாளம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனத்தின் உதவியுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்கும் நோக்கில் படகு மூலம் சென்ற இலங்கையர்களை அவுஸ்திரேலிய அதிகாரிகள் இந்தோனேஷியா கடற்பரப்பில் கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ–4)

# இந்திய வரலாற்றில் கறுப்பு தினம் மும்பையில் தாக்குதல் நடந்த நவம்பர் 26

## தாஜ் ஹோட்டலில் நிறைந்து வழியும் மக்கள் கூட்டம்

(மும்பை)



மும்பையில் பயங்கரவாதத் தாக்குதல் நடந்த நவம்பர் 26ஆம் திகதி இந்திய வரலாற்றில் கறுப்பு தினமாகப் பதிந்து விட்டது.

இக்கசப்பான சம்பவத்தின் ஓராண்டு நிறைவடைவதையொட்டி தாஜ்ஹோட்டல் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் சுற்றுலாப் பயணிகளும் ஊடகவியலாளர்களும் குவிந்து வருகின்றனர்.

கடந்த ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி மும்பையில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் தாஜ் ஹோட்டல் உள்ளிட்ட நான்கு இடங்களில் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தினர். மூன்று நாட்கள் நடந்த இந்தத் தொடர் சண்டையில் பாதுகாப்புப் படை வீரர்கள் அப்பாவி மக்கள் உள்ளிட்ட பலர் உயிரிழந்தனர்.

ஆயிரம் பாதுகாப்புப் படை வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தாஜ் ஹோட்டலின் உட்பகுதியிலும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இதில் உள்ள 287 அறைகள் தாக்குதல் நடந்து 23 நாட்களிலேயே திறக்கப்பட்டு விட்டன. மீதி அறைகள் அடுத்த ஆண்டுக்குள் படிப்படியாகத் திறக்கப்பட்டு விடும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. (ஓ–6)

# "புரட்சி வரி" என்ற பெயரில் பணம் பறித்தோர் பிரான்ஸில் கைது

பிரான்ஸில் வாழ்கின்ற தமிழர் சமூகத்திடம் மிரட்டிப் பணம் பறித்த குற்றச்சாட்டின் கீழ் விடுதலைப்புலிகள் அமைப்பைச்சேர்ந்த ஒரு குழுவினருக்கு ஒரு பிரஞ்சு நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளது. இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான போருக்காக பல இலட்சக்கணக்கான டாலர்களை இந்தக்குழுவினர் பிரான்சில் வாழும் தமிழ் மக்களிடம் மிரட்டிப்பறித்ததாக க் கூறப்படுகிறது.

விடுதலைப்புலிகள் அமைப்பின் பிரான்ஸ் நாட்டின் பிரிவின் தலைவரான நடராஜா மதிந்திரன் என்பவர் உட்பட 21பேர் இந்த வழக்கில் குற்றவாளிகளாக காணப் பட் டுள்ளனர். பாரிஸிலும் அண்மைய பகுதிகளி லும் வாழும் பெரும்பாலும் அரசியல் அகதிக ளான தமிழர்களிடம் புரட்சிவரி என்ற பெயரில் இந்தப் பணம் அறவிடப்பட்டதாக அரசதரப்பு வழக்குத் தொடுனர்கள் தெரிவித் துள்ளனர். (ஓ–6)

# புற்று நோயைக் குணப்படுத்துவதற்கு காண்டாமிருக கொம்பிலிருந்து மருந்து தயாரிப்பு

## கொம்பின் விலை தங்கத்தை விட அதிகரிப்பு

காண்டாமிருகத்தின் கொம்பானது தற்போது தங்கத்தை விட அதிக விலைக்கு விற்பனையாவதால் குறுகிய காலத்தில் செல்வந்தராக விரும்பும் கடத்தல்காரர்களின் இலக்காக அக் கொம்புகள் மாறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தென் ஆசியாவில் மருத்துவத்துக்காக காண்டாமிருகத்தின் கொம்பு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் அங்கு கடந்த 18 மாத காலப்பகுதியில் மேற்படி காண்டாமிருகக் கொம்புகளுக்கான கிராக்கி அதிகரித்துள்ளதால் அவற்றின் விலையும் இரு மடங்காக உயர்ந்துள்ளது.

ஒரு கிலோ நிறையுடைய காண்டா மிருகத்தின் கொம்பு 36.300 ஸ்ரேலிங் பவுணுக்கு விற்பனையாகின்ற அதே சமயம் தங்கமானது 24.000 ஸ்ரேலிங் பவுணுக்கு விலை போகிறது.

சராசரியாக ஒரு காண்டாமிருகத்தின் கொம்பானது 7 கிலோகிராம் நிறையுடையதாகும்.

காண்டாமிருகக் கொம்புக்கு ஏற்பட்டுள்ள கிராக்கி காரணமாக கடந்த 15 வருட காலத்தில் பெருமளவு காண்டாமிருகங்கள் கொல்லப்பட்டன.

2007ஆம் ஆண்டு 13 காண்டா மிருகங்கள் கொல்லப்பட்ட அதேசமயம் இந்த வருடம் 84 காண்டாமிருகங்கள் கொல்லப்பட்



டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காண்டாமிருகக் கொம்பிலிருந்து தயாரிக்கப்பட்ட மருந்தாலே தனது புற்று நோய் குணமாகியதாக வியட்நாம் அமைச்சர் ஒருவர் உரிமை கோரியுள்ளார். (ஓ–6)

# திருப்பதியில் அன்னதான முறையில் மாற்றம்

திருப்பதி கோயிலில் பக்தர்களுக்கான அன்னதானத்தில் தங்களுக்கு வேண்டியவற்றை தாமே பரிமாறிக்கொள்ளும் பஃபே முறையில் திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தினமும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. தினமும் லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் உணவருந்த வரும் இந்த அன்னதானக் கூடத்தில் இடப்பற்றாக் குறை உள்ளதால் பக்தர்கள் சிரமப் பட வேண்டியுள்ளது.

இதனால் வகேஷ்னா பவுண்டேஷன் என்ற அமைப்பின் சார்பில் புதிதாக அன்னதானக் கூடம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. ஒரே நேரத்தில் மூவாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் அமரும் வகையில் இக்கூடம் வடிவமைக் கப்படுகிறது.

மேலும் பக்தர்கள் வரிசையில் நிற்பதற்கு பதிலாக அவரவர் தங்களுக்கு வேண்டியதை தாங்களே பரிமாறிக்கொள்ள வசதியாக பஃபே முறை இங்கு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதற்காக உணவுப் பொருட்கள் வைக்கும் கன்வேயர் பட்டி அமைக்கப்படுகிறது.

புதிய அன்னதான கூடத்தின் கட்டுமானப் பணிகளை எல் அண்ட் டி நிறுவனம் மேற்கொள்கிறது. கன்வேயர் பட்டியை பென்னா சிமெண்ட் நிறுவனம் வழங்குகிறது. புதிய கூடம் 2010 மார்ச் மாதத்தில் செயல்படத்துவங்கும் என்று தேவஸ்தான நிர்வாக அதிகாரி கிருஷ்ணா ராவ் தெரிவித்தார். (ஓ–4)

# சதம் அடித்து அசத்தினர் சேவாக், காம்பீர்; இந்தியா முதல் நாளில் ஓட்டங்கள் குவிப்பு



காம்பீர்

(கான்பூர்)

காம்பீர்-சேவாக் ஜோடியின் அதிரடியான ஆரம்பத்தின் மூலம் இந்திய அணி முதல் நாள் ஆட்டநேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்களையிழந்து 417 ஓட்டங்கள் குவித்தது.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 3 டெஸ்ட், 2 இருபது-20 மற்றும் 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் கடந்த வாரம் அகமதாபாத்தில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிபடைய தொடர் சமநிலையில் உள்ளது.

இந் நிலையில் 2-வது டெஸ்ட் நேற்றுக் கான்பூரில் ஆரம்பமானது. இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்குக் காம்பீர்-சேவாக் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது.

ஆரம்பத்தில் நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய இந்த ஜோடி 14.3 ஓவர்களிலேயே 50 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தது. எனினும் அதிரடியைத் தொடர்ந்த சேவாக் 60 பந்துகளில் அரைச் சதத்தைக் கடக்க இந்திய அணி 21.2 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

மறுமுனையில் காம்பீர் 70-வது பந்தில் அரைச் சதத்தைக் கடந்தார். இந்த ஜோடியைப் பிரிக்க இலங்கை அணித் தலைவர் களத் தடுப்பில் பல வியூகங்களை வகுத்த போதும் பலனளிக்காமல் போக வீரேந்திர சேவாக் 97-வது பந்தில் தனது 16-வது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இந்த ஜோடியின் அதிரடியான இணைப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி 227 பந்துகளில் 200 ஓட்டங்களை எடுத்து அசத்தியது. எனினும் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய வீரேந்திர சேவாக் 122 பந்துகளில் (18 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 131 ஓட்டங்களை எடுத்து முரளிதரனின் பந்து வீச்சில் டில்சானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 41.2 ஓவர்களில் 233 ஓட்டங்களை எடுத்து முதலாவது விக்கெட்டையிழந்தது.

தொடர்ந்து 2-வது விக்கெட்டுக்காக இணைந்த காம்பீர் - ராவிட் ஜோடி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடியது. இதில் கௌதம் காம்பீர் 132-வது பந்தில் தனது 8-வது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இந்த ஜோடி பொறுப்பாகத் துடுப்பெடுத்தாட இந்திய அணி 57.3 ஓவர்களில் 300 ஓட்டங்களை எட்டியது. இதில் ராகுல் ராவிட் 98-வது பந்தில் தனது அரைச் சதத்தைக் கடந்தார்.

மறுமுனையில் ஆரம்பம் முதலே சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய கௌதம் காம்பீர் 181-வது பந்தில் 150 ஓட்டங்களைக் கடக்க இந்திய அணி 68.2 ஓவர்களில் 350 ஓட்டங்களை எட்டியது.

எனினும் கௌதம் காம்பீர் 215 பந்துகளில் (15 பவுண்டரிகள் உட்பட) 167 ஓட்டங்களை எடுத்து முரளிதரனின் பந்து வீச்சில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 75.1 ஓவர்களில் 370 ஓட்டங்களை எடுத்து 2-வது விக்கெட்டையிழந்தது.

அடுத்துக் களமிறங்கிய சச்சின் டெண்டுல்கர் நிதானமாகத் துடுப்பெடுத்தாட இந்திய அணி 83.4 ஓவர்களில் 400 ஓட்டங்களை எட்டியது.

இந் நிலையில் நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இந்திய அணி 90 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களையிழந்து 417 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் ராகுல் ராவிட் 153 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 85 ஓட்டங்களையும் டெண்டுல்கர் 20 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்து வீச்சில் முத்தையா முரளிதரன் 18 ஓவர்கள் பந்து வீசி 100 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இப் போட்டியின் 2 ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.




சேவாக்

**முதன்மை இலக்கு**

இந்திய அணி டெஸ்ட் போட்டி ஒன்றில் ஒரு நாள் ஆட்டத்தில் பெற்ற கூடுதலான ஓட்டங்கள் (2 விக்கெட் இழப்புக்கு 417) இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

# ரெய்லர், குப்தில் பொறுப்பான ஆட்டம் நியூசிலாந்து சரிவிலிருந்து மீண்டது



(டுனிடின்)

குப்தில்-ரெய்லரின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் நியூசிலாந்து அணி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களையிழந்து 276 ஓட்டங்களை எடுத்தது.

நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் நேற்று டுனிடினில் ஆரம்பமானது. இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு ஆரம்பம் அதிர்ச்சியளித்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மைக்கின் றோஸ் 0 உடன் போட்டியின் முதலாவது பந்திலேயே அமீரின் பந்து வீச்சில் நேரடியாக போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய பிளைனும் 8 ஓட்டங்களுடன் ஆஸிப்பின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் அக்மலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க நியூசிலாந்து அணி 5.5 ஓவர்களில் 27 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களையிழந்தது.

இந் நிலையில் 3-வது விக்கெட்டுக்காக இணைந்த குப்தில்-ரெய்லர் ஜோடி பொறுப்புடன் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தது.

இந்த ஜோடி 3-வது விக்கெட்டுக்காக 117 ஓட் டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது அரைச் சதம் கடந்த குப்தில் 142 பந்துகளில் (10 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 60 ஓட்டங்களை எடுத்து அமீரின் பந்து வீச்சில் கலாமிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ரெய்லருடன் இணைந்த புல்டன் நிதானமாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளிதார். மறுமுனையில் அரைச் சதம் கடந்த ரோஸ் ரெய்லர் 174 பந்துகளில் (13 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 94 ஓட்டங்களை எடுத்து அஜ்மலின் பந்து வீச்சில் பார்க்கட்டிடம் பிடிகொடுத்துச் சதம் பெறும் வாய்ப்பை 6 ஓட் டங்களால் இழந்தார்.

அடுத்து புல்டன் 29 ஓட்டங்களுடனும் எலியோட் 8 ஓட்டங்களுடனும் ஆஸிப்பின் பந்து வீச்சில் அடுத்தடுத்து ஆட்டமிழக்க நியூசிலாந்து அணி 73.1 ஓவர்களில் 211 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்களையிழந்தது.

எனினும் 7-வது விக்கெட்டுக்காக இணைந்த மக்குலம்-விக்டோரி ஜோடி பொறுப்புடன் துடுப்பெடுத்தாட நியூசிலாந்து அணி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களையிழந்து 276 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித் தலைவர் டானியல் விக்டோரி 44 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 40 ஓட்டங்களையும் மக்குலம் 60 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 25 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்து வீச்சில் மொகமட் ஆஸிப் 3 விக்கெட்டுக்களையும் மொகமட் அமீர் 2 விக்கெட்டுக்களையும் சையிட் அஜ்மல் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இப் போட்டியின் 2 ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.

## எதிர்வரும்...

ஆணையாளர் தயாநந்த திஸா நாயக்க நேற்று முன்தினம் இரவு வெளியிட்ட விசேட வர்த்தமானியில் தெரிவித்துள்ளார்.

இதன்படி யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் இருந்து 9 நாடாளுமன்ற உறுப்பினர்களும் மட்டக்களப்பில் இருந்து 5 நாடாளுமன்ற உறுப்பினர்களும் திருகோணமலையில் இருந்து 4 உறுப்பினர்களும் வன்னி மாவட்டத்தில் இருந்து 6 உறுப்பினர்களும் திகாமடுல்லவில் இருந்து 7 உறுப்பினர்களுமாக '31 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

வடக்குக்கு வெளியே தமிழர்களை அதிகமாக கொண்டுள்ள நுவரேலியா தேர்தல் மாவட்டத்தில் இருந்து 7 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

ஓரளவு தமிழர்கள் செறிவாக வாழும் கண்டியில் இருந்து 12 உறுப்பினர்களும், மாத்தளையில் இருந்து ஐந்து உறுப்பினர்களும் தெரிவாகவுள்ளனர். மற்றும் பதுளையில் இருந்து 8 பேரும் இரத்தினபுரியில் இருந்து 10 பேரும் கேகாலையில் இருந்து 8 பேரும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதேவேளை கொழும்பில் இருந்து ஒரு உறுப்பினர் தொகை குறைக்கப்பட்டு 19 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் அதேநேரம் அநுராத புரத்திற்கு ஒரு உறுப்பினர் அதிகரிக்கப்பட்டு 9 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர். என தேர்தல்கள் ஆணையாளர் வெளியிட்டுள்ள வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## தனக்கான பாதுகாப்பை வழங்கக்கோரி...

ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள னர்.

ஜனாதிபதிக்கு 2 ஆயிரம் இராணுவ வீரர்களும் பாதுகாப்பு செயலாளருக்கு 500 இராணுவ வீரர்களும் தற்போதைய இராணுவத் தளபதிக்கு 600 இராணுவ வீரர்களும் முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னா கொடவுக்கு 120 இராணுவ வீரர்களும் வழங்கப்பட்டிருப்பதாக இந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா தனக்கு போதுமான பாதுகாப்பு வழங்குமாறும் தனது உத்தியோக பூர்வ இல்லத்தில் மேலும் தங்குவதற்கு இடமளிக்குமாறு அரசாங்கத்துக்கு கட்டளையிடுமாறு கோரி அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை உயர் நீதி மன்றத்தில் நேற்று தாக்கல் செய்தார்.

தன்னைப்போன்று முப்படை சேவையிலிருந்து இளைப்பாறிய ஏனையவர்களுக்கு தலா 120 இற்கும் அதிகமான சிப்பந்திகளும் 6 பாதுகாப்பு வாகனங்களும் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இதைத்தவிர விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேறி அரசாங்கத்துடன் இணைந்துள்ள அமைச்சர்களுக்கும் ஏனைய அமைச்சர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கும் பாதுகாப்பைவிட குறைந்த பாதுகாப்பு தனக்கு வழங்கப்பட்டிருப்பதால் தனது உயிருக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது 62 இராணுவ வீரர்கள் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டிருக்கும் போதிலும் அவர்களில் இருபது பேர் சுழற்சி முறையில் சேவையிலிருந்து மாறும் பட்சத்தில் தமது பாதுகாப்புக்காக 25 இராணுவ வீரர்களே இருப்பது போதுமானதாக இல்லையென்றும் சரத் பொன்சேகா சுட்டிக்காட்டியுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் பெரும் பங்களிப்பை கொண்ட தனக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் காரணமாக 100 இற்கும் அதிகமான இராணுவ வீரர்களை கொண்டு போதுமான பாதுகாப்பு வழங்கு மாறு பாதுகாப்பு வழங்குமாறு பாதுகாப்பு செயலருக்கு கட்டளையிடுமாறும் அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளை தோற்கடித்த பின்னர் முப்படை தலைவர்களுக்கு காணிகள் வழங்கப்பட்டு உறுதிகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் தனக்கு வழங்கப்பட வேண்டிய காணிக்கான உறுதியை பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தன்வசம் வைத்துக் கொண்டிருப்பதை சுட்டிக்காட்டும் சரத் பொன்சேகா இந்த காணி உறுதியை தனக்கு கையளிக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு இந்த மனுவில் கோரியுள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகா எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக போட்டியிடும் எதிரணி கட்சிகளின் பொது வேட்பாளராக தேர்தலில் களமிறங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஜனாதிபதி மகிந்தவுக்கு ஆதரவு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ வுக்கு ஆதரவளிக்க தீர்மானித் துள்ளனர்.

கொழும்பிலுள்ள மகாவலி கேந்திர நிலையத்தில் கடந்த திங்கள் காலை இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு இந்த ஆதரவை தெரிவித்தனர். ஆனால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போதும் கருத்து ஏதும் தெரிவிக்கவில்லை. (ச-5)

# யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மூவாயிரம் பேர் நேற்று விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா, கொடிகாமம், இராமாவில் நலன் புரி நிலையங்களில் தங்கவைக்கப் பட்டிருந்த யாழ்.மாவட்டத்தை சொந்த இடமாகக் கொண்ட 983குடும்பங்களைச் சேர்ந்த 3ஆயிரத்து 117பேர் நேற்று விடு விக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் யாழ். அரச அதிபர் க.கணேஷ் தகவல் தருகையில்,

வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து கடந்த வாரம் யாழ்.மாவட்டத்திற்கு அழைத்து வரப்பட்டு கொடிகாமம் இராமாவில் நலன்புரி முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த 425 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 445 பேர் நேற்று யாழ்.மாவட்டத்தில் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அத்துடன் வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த யாழ்.மாவட்டத்தை சொந்த இடமாகக் கொண்ட 558 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 672பேர் நேற்று இரவு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கிற்கு அழைத்துவரப்பட்டு பிரதேச



செயலக அலுவலர்கள்,படையினரால் குடும்பப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவ்வாறு நேற்று சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட மக்கள் அனைவரும் தமது சொந்த இடங்களுக்கு செல்லவென வவுனியா மாவட்ட செயலகத்திற்கு வழங்கிய விண்ணப்பங்கள் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதத்தினாலேயே தற்போது அழைத்து வரப்பட்டுள்ளனர் எனவும் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் குறிப்பிட்டார்.

இதேவேளை நேற்றிரவு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கிற்கு அழைத்து வரப்பட்ட மக்களுக்கு 5ஆயிரம் ரூபாய் நிதியுதவி அரச அதிகாரிகளினால் வழங்கப்பட்டது.

அத்துடன் மக்களின் நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்து சொந்த இடங்களிற்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக யாழ். அரச அதிபர் க.கணேஷ்,

யாழ்.மாவட்ட செயலக திட்டப்பணிப்பாளர் எம்.பிரதீபன்,உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.சுதர்சன், யாழ்ப்பாண பிரதேச செயலாளர்திருமதிஎஸ்தெய்வேந்திரன்ஆகியோரும் யாழ். துரையப்பா விளையாட்டரங்கிற்கு நேற்றிரவு வந்து பணிகளை முன்னெடுத்தனர். (ச-5)

## எழுத்துப் பரீட்சையில் 94 புள்ளி...

அற்கு மேற்பட்டதாக எடுத்த பரீட்சார்த்திகளை நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் தருமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இது தொடர்பில் வடக்கு மாகாணக் கல் விப் பணிப்பாளர் வீ.இராசையா தகவல் தரு கையில்,

இலங்கை அதிபர் சேவை தரம் III இற்கு பதவியுயர்வு வழங்குவதற்காக ஏற்கனவே நடாத்தப்பட்ட எழுத்துப்பரீட்சை, நேர்முகப் பரீட்சை ஆகியவற்றில் 142 புள்ளிகள் அல்லது அதற்கு மேற்பட்டதாக எடுத்துள்ளதுடன்,

அதில் எழுத்துப் பரீட்சையில் 94 புள்ளிகள் அல்லது அதற்கு மேற்பட்டதாக எடுத்த பரீட்சார்த்திகளை கல்வி அமைச்சில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு உடனடியாக சமுகம் தருமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

குறித்த பரீட்சார்த்திகள் அழைப்புக்கடிதம் கிடைக்காவிடினும் உடனடியாக கல்வி அமைச்சில் தற்போது நடைபெற்றுவரும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கை அதிபர் சேவை தரம் III இற்கு பதவியுயர்வு வழங்குவதற்காக கல்வி அமைச்சில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் தருமாறு கடிதம் மூலம் அழைத்தவர்களில் இதுவரையில் பங்குபற்றாதவர்கள் உடன் வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது என வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா குறிப்பிட்டார். (ச-5)

## உயர்ஸ்தானி...

கந்தசுவாமி கோயிலுக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு தொடர்ந்து யாழ். பொதுநூலகத்தில் இடம்பெறும் விஷேட மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

அத்துடன் புதிதாக மீள்குடியமர்த்தப்பட்ட தீவக மக்களின் நிலை தொடர்பில் நேரில் ஆராய்வதற்காக தூதுவர்கள் குழு பிற்பகல் ஊர்காவற்துறைக்கு விஜயம் மேற்கொள்கின்றனர் எனவும் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் குறிப்பிட்டார். (ச)

## மட்டு. தேசிய...

வெளியேறி வீதிக்கு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் யாழ். மாணவர்களுக்கு பாதுகாப்பு வழங்கியதுடன் தாக்குதல் குறித்த விசாரணைகளையும் மேற்கொண்டனர்.

இதேவேளை நிலைமையை கட்டுப்படுத்த பொலிஸாரின் உதவி நாடப்பட்டுள்ளதாக தெரிவித்த பீடாதிபதி எஸ். பாக்கியராஜா தாக்குதல் மேற்கொண்டதாகச் கூறப்படும் மாணவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறினார்.

யாழ்ப்பாண மாணவர்கள் மட்டக்களபில் கல்வி பயிலக்கூடாது எனத் தெரிவித்து மட்டக்களப்பு மாவட்ட மாணவர்களாலேயே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்பட்டது. எனினும் இது குறித்து மட்டக்களப்பு மாணவர்களிடம் தகவலறிய முடியவில்லை. (ச)

## பிரதான எதிர்க்கட்சிகளின்...

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதாக எங்களுடன் உடன்பாடு ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

ஆனால் நிறைவேற்று அதிகார முறையை நிறை செய்யாமல் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலை நடத்த முயற்சிக்கின்றார்.

இன்று அரசு சர்வாதிகார போக்கை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. மறுபுறத்தில் ஊழல் மோசடி,லஞ்சம் போன்றவை நிறைந்து வழிகின்றன.

அத்துடன் தனது குடும்பத்தின் ஆதிக்கத்தை மேலும் நிலை நிறுத்துவதற்கு எதுவானநடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதனால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையின் ஊடாக இம்முறை நாட்டிற்கு மீண்டும் ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்படுவாரானால் நிச்சயமாக நாடு இதைவிட பாரிய அனர்த்தங்களை எதிர்கொள்ளும்.

அந்த அனர்த்தங்களில் இருந்து நாட்டை மீண்டெடுத்தாக வேண்டும். அதற்காக மகிந்த ராஜபக்ஷவின் போக்கை தோல்வி அடையச் செய்ய வேண்டும்.

இவற்றின் அடிப்படையில் நாங்கள் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்துள்ளோம் என்றார்.

மே மாதம் 18 ஆம் திகதிக்குப் பின் தமிழ் மக்கள் மீது, கடந்த காலத்தைப் போன்று தமிழ் மக்களை ஒடுக்குவதற்கோ தமிழ் மக்கள் மீது இனமுரண்பாடுகளை ஏற்படுத்துவதற்கோ மக்கள் விடுதலை முன்னணி இடந்தராது.

அதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்ற உறுதி எங்களிடம் உள்ளது. இதனடிப்படையிலேயே நாங்கள் செயற்படுகிறோம் என்றார். (ச-5)

## வன்னி அரசா...

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பணிபுரியும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அரச ஊழியர்கள் தமது தேசிய அடையாள அட்டை, உத்தியோக அடையாள அட்டையு டன் இன்று காலை 6.30 மணிக்கு யாழ். சிங்கள மகாவித்தியாலயத்திற்கு வருகைதர வேண்டும்.

அத்துடன் இங்கிருந்து தினமும் காலை 6.30 மணிக்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு புறப்பட்டுச் செல்லும் பஸ்கள் மீண்டும் பிற்பகல் யாழ்ப்பாணத்திற்கு திரும்பும்.

எனவே அரச ஊழியர்கள் தமது பணி நேரம் முடிவடைந்ததும் மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு அன்றைய தினமே திரும்ப முடியும் என யாழ். அரச அதிபர் க.கணேஷ் குறிப்பிட்டார். (ச-5)

இன்னும் 05 நாட்கள் மட்டுமே!
அமெரிக்கன் விசாவிற்கான தங்கள் அதிஸ்டத்தை பரீட்சிக்க
உடன் நாடுங்கள்
தங்கள் பாஸ்போட் அளவிலான படத்துடன்
உள்நாட்டு வெளிநாட்டு கடிதங்கள் பொதிகள் சேவையில்
யாழ் நகரில் முன்னணி வகிக்கும்,
Nokia யாழ் மாவட்ட முகவரான
திருமுருகன் கொம் நெற்
259 கே.கே. எஸ் வீதி யாழ்ப்பாணம்
46 ஆடியபாதம் வீதி திருநெல்வேலி
T.P No: 021 222 7835




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.